# அடிப்படைத் தமிழ்
# சமய இலக்கியங்களும் சிறுகதையும்
(MCQ)

ஆசிரியர்
திருமதி.சி.ஹேமலதா

செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒசூர்

(பெரியார் பல்கலைக்கழகம், சேலம் இணைவுப்பெற்றது)

அனைத்து முதலாமாண்டு இளநிலை மாணவர்களுக்குரியது

தாள் - 21UFTA02

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

# சமய இலக்கியங்களும் சிறுகதையும்

ஒரு மதிப்பெண் - வினா-விடை


ஆசிரியர் : திருமதி. சி.ஹேமலதா

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

செயின்டஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

ஒசூர் - 635 126

செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒசூர்

பொருளடக்கம்


அலகு-1 - சமய இலக்கியங்கள்

1. திருஞான சம்பந்தர் - தேவாரம் - இரண்டாம் திருமுறை
2. ஆண்டாள் - திருப்பாவை
3. திருமூலர் - திருமந்திரம்
4. இராமலிங்க அடிகள் - திருவருட்பா
5. குணங்குடி மஸ்தான் சாகிபு - பராபரகண்ணி
6. கண்ணதாசன் - இயேசு காவியம்

அலகு-2 - சிற்றிலக்கியங்கள்

7. முத்தொள்ளாயிரம் - சேரன், சோழன், பாண்டியன்
8. நந்திக் கலம்பகம் - 5 பாடல்கள்
9. முத்துக்குமாரசாமி பாடல்கள் - அம்புலிப் பருவம்
10. அழகர் கிள்ளை வீடு தூது - 10 கண்ணிகள்
11. கலிங்கத்து பரணி - பேய் முறைப்பாடு
12. அபிராமி அந்தாதி 5 பாடல்கள்

அலகு-3 - சிறுகதை

13. சிறுகதைத் தொகுப்பு (தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுகதைகள்)

அலகு-4 - இலக்கிய வரலாறு

14. பன்னிரு திருமுறைகள்
15. நாலாயிர திவ்ய பிரபந்தம்
16. திருமடங்களின் தமிழ்ப்பாணி
17. இலக்கண நூல்கள
18. உரையாசிரியர்கள்

19. சிற்றிலக்கியங்கள்
20. பதிணென் சித்தர்கள்

அலகு-5 -மொழித்திறன்

21. பகுபத உறுப்பிலக்கணம்
22. ஆகுபெயர்
23. தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை, நேர்கூற்று, அயற்கூற்று.
24. மயங்கொலிச் சொற்கள்
25. நேர்க்காணல்
26. விண்ணப்பம் அலுவலக கடிதம் எழுதுதல்

## அலகு -1

## சமய இலக்கியங்கள்

### 1. தேவாரம் - இரண்டாம் திருமுறை

### - திருஞானசம்பந்தர்

1.'வேய்' என்பதன் பொருள் யாது?

அ) மூங்கில்

ஆ) ஆல்

இ) கொன்றை

ஈ) வன்னி

விடை : அ

2. கழுத்திலே விஷம் கொண்டவன் யார்?

அ)இராமன்

ஆ) ஈசன்

இ) ராகு

ஈ)கேது

விடை : ஆ

3.பன்றிக் கொம்பு, ஆமை ஆகியவற்றை மாலையாகக் கொண்டவன் யார்?

அ) பிரமன்

ஆ) முருகன்

இ)சிவபெருமான்

ஈ) விஷ்ணு

விடை : இ

4. ஈசனின் கழுத்தில் மாலையாக உள்ள மலர் எது?

அ) ஊமத்தம்

ஆ) சாமந்தி

இ) தாமரை

ஈ) மல்லிகை

விடை : அ

5. ஈசனின் வாகனம் எது?

அ) இடபம்

ஆ) யானை

இ) சிங்கம்

ஈ)புலி

விடை : அ

6.பூமியை இயக்கும் தெய்வங்கள் எவை?

அ) பாலகர்கள்

ஆ)அதிதேவதை

இ) பிரமன்

ஈ)திருமகள்

விடை : ஆ

7.ஈசன் ஆலின்கீழ் இருந்து யாருக்கு உபதேசம் அளித்தார்?

அ) சனகாதி முனிவர்க்கு

ஆ) துர்க்கைக்கு

இ) திருஞான சம்பந்தர்க்கு

ஈ)அட்டதிக்குப் பாலகர்களுக்கு

விடை : அ

8) யாரைத் தொழுதால் சினம் மிகுந்த கூற்றுவனும் நம்மை நெருங்கான்என்று சம்பந்தர் கூறுகின்றார்?

அ) நான்முகனை

ஆ) ஈசனை

இ)விஷ்ணுவை

ஈ)சூரியனை

விடை : இ

9. பிறவா யாக்கைப் பெரியயோன் யார்?

அ) சிவபெருமான்

ஆ)பெருமாள்

இ)பிரமன்

ஈ)எமன்

விடை : அ

10. மின்னலெனத் தோன்றி மிகை கொண்டு செய்யும் பூதங்களும் எமக்குத் தீயன செய்ய அஞ்சும் என்றவர் யார்?

அ) நாவுக்கரசர்

ஆ)சம்பந்தர்

இ) சுந்தரர்

ஈ)திருவாதவூரர்

விடை : இ

11. பஞ்ச பூதங்களின் தலைவர் யார்?

அ) இந்திரன்

ஆ)சிவபெருமான்

இ) பிரமன்

ஈ)அக்னிபகவான்

விடை : ஆ

12. புலித்தோலை ஆடையாகக் கொண்டவர் யார்?

அ)சிவன்

ஆ)சனீஸ்வரன்

இ)சந்திரன்

ஈ)சனீஸ்வரன்

விடை : அ

13. 'கேழல்' என்பதன் பொருள் யாது?

அ) யானை

ஆ) கரடி

இ)பன்றி

ஈ)புலி

விடை : ஆ

14.'அப்பு' என்பதன் பொருள் யாது?

அ) கங்கை

ஆ) பிறைநிலா

இ)யமுனை

ஈ) பாம்பு

விடை : அ

15.உமையை ஒரு பாகமாகக் கொண்டவன் யார்?

அ) பெருமாள்

ஆ) பிரமன்

இ.முருகன்

ஈ) ஈசன்

விடை: இ

16. ஈசன் யாரை நெற்றிக்கண்ணை விழித்து அழித்தான்?

அ) மன்மதனை

ஆ) அரக்கனை

இ) சூரியனை

ஈ) சந்திரனை

விடை : அ

17. கடல் சூழ்ந்த இலங்கையின் மன்னன் யார்?

அ) விபிஷணன்

ஆ) இராவணன்

இ) சுக்ரீவன்

ஈ)வாலி

விடை : ஆ

18. தாமரை மலர்மேல் அமர்ந்திருப்பவன் யார்?

அ) நான்முகன்

ஆ) விநாயகர்

இ) முருகன்

ஈ) விஷ்ணு

விடை : அ

19. 'சலமகள்'-யார்?

அ) லட்சுமி

ஆ) உமையம்மை

இ) கங்கை

ஈ)காவேரி

விடை : இ

20. கொத்தலர் குழலி'-யார்?

அ) உமாதேவி

ஆ) லட்சுமி

இ) சரஸ்வதி

ஈ) தேவயானை

விடை : அ

21. 'மத்தம்' என்பதன் பொருள் யாது?

அ) செம்பருத்தி

ஆ) ஊமத்தை

இ)அரளி

ஈ) கொன்றை

விடை : ஆ

22. மறைஞானவல்ல முனிவன் யார்?

அ)திருஞானசம்பந்தர்

ஆ) அகத்தியர்

இ) நான்முகன்

ஈ) சட்டைமுனி

விடை : ஆ

23. 'வேயுறு தோளிபங்கள்' எனத் தொடங்கும் பாடலை பாடுவதனால் ஏற்படும் நன்மை யாது?

அ) ஒன்பது கோள்களினால் ஏற்படும் தீமை அகலும்

ஆ) அதிக நன்மை கிடைக்கும்

இ) விண்ணில் அரசாளும் பேற்றினைப் பெறுவர்

ஈ) இவை அனைத்தும் கிடைக்கும்

விடை : அ

**2. திருப்பாவை - 11-20 பாடல்கள் - ஆண்டாள்**

24. ஆண்டாளை வளர்த்தவர் யார்?

அ) பெரியாழ்வார்

ஆ) நம்மாழ்வார்

இ) திருமங்கையாழ்வார்

ஈ ) பொய்கையாழ்வார்

விடை : அ

25.ஆண்டாளைக் கண்டெடுத்த இடம் எது?

அ) அரளிச் செடி

ஆ) துளசிச் செடி

இ) மல்லிகைச் செடி

ஈ) ரோஜாச் செடி

விடை : ஆ

26.ஆண்டாளின் ஊர் எது?

அ) மதுரை

ஆ) ஸ்ரீரங்கம்

இ) ஸ்ரீவில்லிபுத்தூர்

ஈ) காஞ்சிபுரம்

விடை : இ

27.ஆண்டாளுக்கு பெரியாழ்வார் வைத்த பெயர் என்ன?

அ) சூடி கொடுத்த சுடர்க்கொடி

ஆ) நாச்சியார்

இ) ஆண்டாள்

ஈ).கோதை

விடை : ஈ

28.சூடிக் கொடுத்த சுடர்க்கொடி யார்?

அ) ஆண்டாள்

ஆ) இலட்சுமி

இ)பார்வதி

ஈ) சரஸ்வதி

விடை : அ

29.மானிடராய் இருந்து கடவுளிடம் சேர்ந்தவர் யார்?

அ)புனிதவதியார்

ஆ) ஆண்டாள்

இ)லட்சுமி

ஈ)துர்க்கை

விடை : ஆ

30.ஆண்டாள் இறைவனுடன் கலந்த இடம் எது?

அ)திருவரங்கம்

ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர்

இ)திருப்பதி

ஈ) மதுரை

விடை : அ

31.திருப்பாவையில் உள்ள பாடல்கள் எத்தனை?

அ)143

ஆ)30

இ)50

ஈ)33

விடை : ஆ

32.ஆண்டாள் யாருடைய அவதாரமாகக் கருதப்படுகிறாள்?

அ)பூதேவி

ஆ)லட்சுமி

இ)சரஸ்வதி

ஈ)பார்வதி

விடை : அ

33. கம்சன் ஏவிய வலிய யானையின் பெயர் என்ன?

அ) களிறு

ஆ)குவலயாபீடம்

இ)அசனிவேகம்

ஈ)பிடி

விடை : ஆ

34. சீற்றத்துடன் இராவணனைக் கொன்று அழித்தவன் யார்

அ)இராமன்

ஆ)பலராமன்

இ)கம்சன்

ஈ)தசரதன்

விடை : அ

35. பறவை உருவத்தில் வந்த அசுரனின் பெயர் யாது?

அ) கம்சன்

ஆ)பகாசுரன்

இ) இராவணன்

ஈ)மாரீசன்

விடை : ஆ

36. நகங்களால் இரணியனைக் கொன்றவன் யார்?

அ) இராவணன்

ஆ)நரசிம்மன்

இ)இராமன்

ஈ)கண்ணன்

விடை : ஆ

37. புழைக்கடைத் தோட்டத்தில் பூத்த மலர் எது?

அ) ஆம்பல்

ஆ)தாமரை

இ) மல்லிகை

ஈ)செங்கழுநீர்ப் பூ

விடை : ஈ

38. சங்கையும் சக்கரத்தையும் கையில் ஏந்தியவன் யார்?

அ) கண்ணபிரான்

ஆ)பிரமன்

இ)இந்திரன்

ஈ)சந்திரன்

விடை : அ

39. குவலயாபீடம் என்ற யானையை அழித்தவன் யார்?

அ) கம்சன்

ஆ)முருகன்

இ) கண்ணபிரான்

ஈ)நான்முகன்

விடை : இ

40. கண்ணனின் அண்ணன யார்?

அ)பலதேவன்

ஆ)இராமன்

இ)நான்முகன்

ஈ)இந்திரன்

விடை : அ

41.திருப்பாவை ஜீயர் என்று அழைக்கப்படுபவர் யார்?

அ)நம்மாழ்வார்

ஆ)நாதமுனிகள்

இ)இராமானுஜர்

ஈ)திருமங்கையாழ்வார்

விடை : இ

42. நோன்புக்குத் தேவையான பொருள் எது?

அ) விசிறி, கண்ணாடி

ஆ) பால், நெய்

இ) கண்ணாடி, கண்மை

ஈ)விசிறி,பூ

விடை : அ

43. 'மானிடர்க்கு எனப் பேச்சுப்படின் வாழ்கிலேன்' என்று கூறியவர் யார்?

அ) ஆண்டாள்

ஆ) துர்க்கை

இ)லட்சுமி

ஈ) உமாதேவி

விடை : அ

### 3. திருமந்திரம் - இளமை நிலையாமை - திருமூலர்

44. திருமூலர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்? எழுதுக.

அ) 300

ஆ) 3000

இ) 1000

ஈ) 150

விடை : ஆ

45 .திருமந்திரத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர் யாது?

அ) திருமந்திரமாலை

ஆ) திருமந்திரம்

இ) தமிழ் மாலை

ஈ) சைவ சித்தாந்தம்

விடை : அ

46. "சைவ சித்தாந்தம்" என்ற தொடர் முதன்முதலில் இடம்பெற்ற நூல் எது?

அ) திருப்பாவை

ஆ)தேவாரம்

இ) திருமந்திரம்

ஈ) திருவாசகம்

விடை : இ

47. திருமூலர் யார் உடம்பில் தமது உயிரைப் புகுத்தினார்?

அ) மூலன்

ஆ) அசுரன்

இ) வீரன்

ஈ) அந்தணர்

விடை : அ

48.உதித்த சூரியன் மறைவதையும் ,கன்று மூத்து மடிவதையும் கண்டபின்னாவது இளமை நிலைக்காது என்ற உண்மையை உலகம் அறியவேண்டும் என்று கூறியவர் யார்?

அ) திருமூலர்

ஆ) மூலன்

இ) அகத்தியர்

ஈ)பத்தரகிரியார்

விடை : அ

49.எண்ணெயும் திரியும் இருந்தாலும் விளக்கின் சுடர் ஒளிவீசத் ______ வேண்டும்.

அ) தூண்டுகோள்

ஆ) நெய்

இ) தீப்பெட்டி

ஈ) விளக்கு

விடை : அ

50. உயிர் தலைவன் யார்?

அ) இறைவன்

ஆ) தாய்

இ) தந்தை

ஈ)குரு

விடை : அ

51. கங்கை ஆறு பாய்ந்து அடங்கியிருக்கும் விரிசடை உடைய கடவுள் யார்?

அ) நான்முகன்

ஆ) விஷ்ணு

இ) சிவன்

ஈ) தேவேந்திரன்

விடை : இ

52. 'ஓர்ந்தற்று' என்பதன் பொருள் யாது?

அ) எண்ணிஉணர்ந்து

ஆ) ஆராய்ந்து செய்யத்தக்க

இ) அடங்கியிருத்தல்

ஈ) உள்ளத்தில் இருத்திக்கொள்ளல்

விடை : அ

53. 'காஞ்சிரம்' - என்பதன் பொருள் யாது?

அ) மிகுந்த கசப்புத் தன்மை உடைய எட்டிக்காய்

ஆ) கருப்பஞ்சாறு

இ) பூமொக்கு

ஈ) பெண்கள்

விடை : அ

54. இளமையில் எதைத் தேடவேண்டும் என்கிறார் திருமூலர்?

அ) பணம்

ஆ) ஆடை அணிகலன்

இ) இறை அருள்

ஈ) உறவினர்

விடை : இ

55. வாழ்வை வீணாக்குபவர்களைப் பார்த்து யார் கோபிப்பான் என்று திருமூலர் கூறுகின்றார்?

அ) இறைவன்

ஆ) பெற்றோர்

இ) ஆசிரியர்

ஈ) நண்பன்

விடை : அ

56.முத்தொழிலில் அழித்தல் தொழிலுக்கு அதிபதியாக இருப்பவன் யார்?

அ) ஈசன்

ஆ) நான்முகன்

இ) வாயு

ஈ) அக்னிபகவான்

விடை : அ

57. எதை அடக்கினால் விண்ணில் பறக்கும் விந்தை ஏற்படும் என்கின்றார் திருமூலர்?

அ) சினம்

ஆ) ஆசை

இ) ஐந்து புலன்கள்

ஈ) வலிமை

விடை : இ

58. யார் வானுலகப் பேறு பெறுவார்கள்?

அ) ஞானத்தை அறிந்தவர்கள்

ஆ) சூரிய கலையை அறிந்தவர்கள்

இ) சந்திர கலை அறிந்தவர்கள்

ஈ) பதினாறு கலைகள் அறிந்தவர்கள்

விடை : அ

59. உயிர்களைச் சினந்தழிக்கின்ற காலன் யார்?

அ) உருத்திர மூர்த்தி

ஆ) பிரம்மா

இ) விஷ்ணு பகவான்

ஈ) சுந்தர மூர்த்தி

விடை : அ

**4. திருவருட்பா - இராமலிங்க அடிகள்**

**முதல் திருமுறை - சென்னைக் கந்த கோட்டம்**

60.இராமலிங்க அடிகள் பாடியுள்ள திருவருட்பா எத்தனை திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன?

அ) 6

ஆ) 8

இ) 10

ஈ) 4

விடை : அ

61. இராமலிங்க அடிகள் இறைவனை எந்த உறவுமுறையில்விளித்துள்ளார்?

அ) தாயாக

ஆ) தந்தையாக

இ)கடவுளாக

ஈ) குருவாக

விடை : ஆ

62. மணமுடைய செந்தாமரை மலரின் நிறம் உடையவர் யார்?

அ) சிவன்

ஆ)பெருமாள்

இ) முருகன்

ஈ)விநாயகர்

விடை : இ

63. மயில் மேல் ஊர்ந்து வருபவர் யார்?

அ) முருகன்

ஆ)நான்முகன்

இ) இந்திரன்

ஈ) சந்திரன்

விடை : அ

64.சென்னைக் கந்தகோட்டத்துள் எழுந்தருளி உள்ள இறைவன் யார்?

அ) ஆறுமுகன்

ஆ)நான்முகன்

இ) கந்தசாமிக் கடவுள்

ஈ) முருகன்

விடை : இ

65. இராமலிங்க அடிகளின் சிறப்புப் பெயர் என்ன?

அ) அருட்பிரகாச வள்ளலார்

ஆ) இராமலிங்கம்

இ) இராமையா

ஈ) தாயுமானவர்

விடை : அ

66. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'என்ற கொள்கை உடையவர் யார்?

அ.வள்ளலார்

ஆ)பட்டினத்தார்

இ)வள்ளுவர்

ஈ) தாயுமானவர்

விடை : அ

67. அகத்திய முனிவருக்கு ஓங்காரப் பொருளை உணர்த்தியவர் யார்?

அ) நான்முகன்

ஆ)சிவன்

இ)முருகன்

ஈ) விநாயகர்

விடை : இ

68. பொதிகை மலையில் உறைந்துள்ள முனிவன் யார்?

அ)அகத்தியர்

ஆ) விருசிகன்

இ)நாரதர்

ஈ) பாணினி

விடை : அ

69.பொதிகை மலையின் வேறு பெயர் என்ன?

அ) இமயமலை

ஆ)மலய

இ) கொல்லிமலை

ஈ)ஏலகிரிமலை

விடை : ஆ

70. 'மலய முனிவன்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) சிவபெருமான்

ஆ)முருகன்

இ) அகத்தியர்

ஈ) நான்முகன்

விடை : இ

71. சிவஞானக் கடல் என்று அழைக்கப்படும் கடவுள் யார்?

அ)இந்திரன்

ஆ)நான்முகன்

இ) சிவன்

ஈ)முருகன்

விடை : ஈ

72. "சகல கேவலம் இலாத இடம் பெற்று வாழ்கின்ற வாழ்வை தந்தருள வேண்டும் என்று முருகனிடம்வேண்டுபவர் யார்?

அ) வடலூர் வள்ளலார்

ஆ)அகத்தியர்

இ) சிவவாக்கியார்

ஈ)அருணகிரியார்

விடை : அ

73.முருகப்பெருமானுடைய தேவியர்கள் யார்?

அ) வள்ளியம்மை

ஆ) வள்ளி தெய்வானை

இ) பார்வதி இந்திராணி

ஈ) லட்சுமி சரஸ்வதி

விடை : ஆ

74. ஆறுமுகங்களை உடையவர் யார்?

அ) காளி

ஆ) நான்முகன்

இ) சிவபெருமான்

ஈ) முருகன்

விடை : ஈ

75. உத்தமர்களின் உறவு வேண்டும் என்று கூறுபவர் யார்?

அ) அருணகிரியார்

ஆ) குமரகுருபரர்

இ)வள்ளலார்

ஈ) பாரதியார்

விடை : இ

76. உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசும் உறவு ________ வேண்டும்

அ) கலவாமை

ஆ)இணைந்திருக்க

இ) மறவாமல்

ஈ) மிதமாக

விடை : அ

77. 'மதம்' என்பதை என்னவென்று கூறுகின்றார் இராமலிங்கர்?

அ) பேய்

ஆ) தாய்

இ) உறவு

ஈ) அடையாளம்

விடை : அ

78.'ஈயென்று நான் ஒருவரிடம் நின்று கேளாத' இயல்பு வேண்டும் என்று முருகனிடம் வேண்டுபவர் யார்?

அ) அகத்தியர்

ஆ) அருணகிரியார்

இ) வள்ளலார்

ஈ) தாயுமானவர்

விடை : இ

79. 'திருவருட்பாவின் ஆசிரியர் யார்?

அ) முருகன்

ஆ) இராமலிங்க அடிகள்

இ) தாயுமானவர்

ஈ) திருஞானசம்பந்தர்

விடை : ஆ

## 5. பராபரக்கண்ணி (1-10 பாடல்கள்)

**- குணங்குடி மஸ்தான் சாகிபு**

80. 'இஸ்லாமியத் தாயுமானவர்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) குணங்குடி மஸ்தான் சாகிபு

ஆ) நயினா முகமது

இ) காதிர்லெப்பை

ஈ) சீயமங்கலம் அருணாச்சலம்

விடை : அ

81. குணங்குடியாரின் இயற்பெயர் என்ன?

அ) தாயுமானவர்

ஆ) குணங்குடியார்

இ) சுல்தான் அப்துல் காதிர்

ஈ) நயினா முகமது

விடை : இ

82.குணங்குடி மஸ்தான் சாகிபுமீது நான்மணி மாலையை பாடியவர்யார்?

அ) அய்யாசாமி முதலியார்

ஆ) திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர்

இ) திருமூலர்

ஈ) அருணாகிரிநாதர்

விடை : ஆ

83.குணங்குடி மஸ்தான் சாகிபுமீது பதிற்றுப்பத்தந்தாதி பாடியவர் யார்?

அ) அய்யாசாமி முதலியார்

ஆ) முத்தையா

இ) பண்டிதர் சம்பந்தாண்டான்

ஈ) பிரபு தேவராயன்

விடை : அ

84. இஸ்லாமிய சித்தர் என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) மஸ்தான் சாகிபு

ஆ) அப்துல் காதிர் லெப்பை

இ)சரவணப்பெருமாள்

ஈ) கோவளம் சபாபதி

விடை : அ

85. ஆலிம் என்பதன் பொருள் யாது?

அ) போதை வெறி

ஆ)சமயக் கல்வி அறிஞர்

இ) அத்தர் வணிகம்

ஈ)வெறிபிடித்த ஞானியர்

விடை : ஆ

86. இரண்டு இரண்டு அடிகளைக் கொண்ட பாடலை என்ன என்று அழைப்பர்?

அ) பாடல்

ஆ) கீதம்

இ) கண்ணி

ஈ) கன்னி

விடை : இ

87. மஸ்தான் என்பதன் பொருள் யாது?

அ) போதை வெறி

ஆ) மத வெறி

இ) சமயக் கல்வி அறிஞர்

ஈ) ஆசிரியர்

விடை : அ

88. மஸ்தான் சாகிபு செய்த தொழில் எது?

அ) ஆசிரியர்

ஆ) சமயக் கல்வி அறிஞர்

இ) அத்தர் வணிகம்

ஈ) வேளாண்மை

விடை : இ

89. சித்தரின் பாடல்கள் எவற்றை உணர்த்துகின்றன?

அ) உலகின் நிலையாமையை உணர்த்துகின்றன

ஆ) இறைவனின் திருக்கூத்தை

இ) இறை தன்மையை மறக்காத நிலையை

ஈ) துறவுநிலையை

விடை : அ

90. மஸ்தான் சாகிபிடம் தீட்சை பெற்றவர் யார்?

அ) சரவணப்பெருமாள்

ஆ) நயினா முகமது

இ) அப்துல் காதிர் லெப்பை

ஈ) ஆலிம்

விடை : அ

91.மஸ்தான் சாகிபின் ஆசிரியர் யார்?

அ) கோவளம் சபாபதி

ஆ) சரவணப்பெருமாள்

இ) அப்துல் காதிர் லெப்பை

ஈ) நயினா முகமது

விடை : இ

92. இறைவன் ஆடும் திருக்கூத்து எது?

அ) கும்மிருட்டாகிய சுத்தவெளி

ஆ) படைப்பின் பொருள்

இ) படைப்பின் இரகசியங்கள்

ஈ) இயற்கையின் ரகசியம்

விடை : இ

93. படிப்பதால் உணர முடியாதவன் யார்?

அ) இறைவன்

ஆ) ஆசிரியர்

இ) பெற்றோர்

ஈ) சுத்தவெளி

விடை : அ

94. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களை தொகுத்தவர் யார்?

அ) சரவணப் பெருமாள் ஐயர்

ஆ) அய்யா சாமி

இ) சீயமங்கலம் அருணாச்சல முதலியார்

ஈ) நயினா முகமது

விடை : இ

**6. இயேசு காவியம் - பாரச்சிலுவை( 6 பாடல்கள் )**

**-கண்ணதாசன்**

95.தொட்டதெல்லாம் பொன்னாகும் வள்ளலிடம் பணம் கொடுத்தவன் யார்?

அ) தொழுநோய்க்காரன்

ஆ) ஏழை

இ) பணக்கா ரன்

ஈ) வளன்

விடை : அ

96. எத்தனைப்பேர் சுமக்கக்கூடிய சிலுவையை இயேசுவின் மேல் ஏற்றி வைத்தனர்?

அ) 4 பேர்

ஆ) 8 பேர்

இ) 10 பேர்

ஈ) 2 பேர்

விடை : ஆ

97. யாருடைய கட்டளைப்போல் வானம் நடுங்கியது?

அ) இயேசு

ஆ) மரியாள்

இ)கடவுள்

ஈ) சூசை

விடை : இ

98. கல் மனமுடையோர் நடந்து சென்றால் முள்ளாக மாறுவது எது?

அ) கடல்பஞ்சு

ஆ) பூக்கள்

இ)கல்

ஈ) மணல்

விடை : அ

99. மானம் என்ற ஒரு பண்பைமனிதகுலம் காண விரும்பியதால் ஏசுவின் தலையில் எதை வைத்தனர்?

அ) முள் கிரீடத்தை

ஆ) சிலுவையை

இ)கல்லை

ஈ) கடல் பஞ்சு

விடை : அ

100. கொல்லும் தன்மை வாய்ந்த பாம்பு, புலிகள் என்ன செய்தன?

அ) கடித்தன

ஆ) கண்ணீர் வடித்தன

இ) வழி மறித்தன

ஈ)ஓடின

விடை : ஆ

101. நல்லவர்களுக்காக வருவது எது?

அ) மழை

ஆ) பணம்

இ) பொருள்

ஈ) உணவு

விடை : அ

102. உலகம் எதனால் நடுங்கியது?

அ) இயேசு சிலுவை சுமந்ததால்

ஆ) மழை வந்ததால்

இ) இயேசு பெருமான் தலையில் முள்கிரீடம் வைத்ததால்

ஈ) மின்னல் தோன்றியதால்

விடை : இ

103. தள்ளாடும் உடலோடு தவழ்ந்து சென்றோர் யார்?

அ) இயேசு

ஆ) ஊர் மக்கள்

இ)வளன்

ஈ) மரியாள்

விடை : அ

104. அலைஅலையாய் வருவோர்முன் இயேசு எவ்வாறு நடந்தார்?
அ) அசைந்தாடி

ஆ)தள்ளாடி

இ) சோர்ந்து

ஈ)வீழ்ந்து

விடை : அ

105.கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

அ) துப்பாக்கி

ஆ)கமகப்பிரியர்

இ) முத்தையா

ஈ) சின்னையா

விடை : இ

106. கண்ணதாசன் நடத்திய ஏட்டின் பெயர் என்ன?

அ) தென்றல்

ஆ) மலர்

இ) வானம்

ஈ) காற்று

விடை : அ

107. இயேசு காவியத்தின் ஆசிரியர் யார்?

அ) கண்ணதாசன்

ஆ) வாணிதாசன்

இ)சுரதா

ஈ) காளமேகம்

விடை : அ

108. கவிஞர் கண்ணதாசனின் ஊர் எது?

அ) சிவகங்கை

ஆ) சிறுகூடல்பட்டி

இ)மதுரை

ஈ) காரைக்குடி

விடை : ஆ

109. கண்ணதாசன் மணிமண்டபம் எங்கு அமைந்துள்ளது?

அ) காரைக்குடி

ஆ) கும்பகோணம்

இ) மதுரை

ஈ) காஞ்சி

விடை : அ

110. 'இறவாக் காவியம் என்று அழைக்கப்படுவது எது?

அ) இயேசு காவியம்

ஆ) ஆட்டனத்தி ஆதிமந்தி

இ)தென்றல்

ஈ) மலர்கள்

விடை : அ

111. இயேசு பிரானை சிலுவையில் அறைந்த இடம் எது?

அ) திருச்சபை

ஆ)கல்வாரி

இ) பெத்தலேகம்

ஈ) ஏரோறு

விடை : ஆ

112. இயேசுவைக் காட்டிக் கொடுத்த சீடர் யார்?

அ) யூதாஸ்

ஆ) எரோறு

இ) சூசை

ஈ) அன்னாஸ்

விடை : அ

**அலகு -2**

**சிற்றிலிக்கியங்கள்**

**7. முத்தொள்ளாயிரம்**

113.கோக்கோதை என்று அழைக்கப்படும் வேந்தன் யார்?

அ) சோழன்

ஆ) சேரன்

இ) பாண்டியன்

ஈ) பல்லவன்

விடை : ஆ

114. யாரை நினைத்து ஏங்கி பெண்களின் அழகு குன்றியது?

அ) தலைவனை

ஆ) சோழனை

இ) பல்லவனை

ஈ) சேரனை

விடை : ஈ

115. 'காராடு' என்பதன் பொருள் யாது?

அ) மாடு

ஆ) வெள்ளாடு

இ) செம்மறி ஆடு

ஈ) கறுப்பாடு

விடை : ஆ

116. தலைவியின் தாய் துர்சக்தியை விரட்டுவதற்காக எதை பலி கொடுத்துச் சில சடங்குகளைச் செய்கிறாள்.

அ) இரத்தம்

ஆ) கிடா

இ) சேவல்

ஈ) எருமை கிடா

விடை : அ

117.அன்னையின் அறியாமையைத் தலைவி யாரிடம் கூறுகின்றாள்

அ) செவிலி

ஆ) தோழி

இ) தலைவன்

ஈ) நற்றாய்

விடை : ஆ

118. குடிமக்களின் குறையை அவர்கள் சொல்லாமலேயே தீர்த்து வைப்பது யாருடைய கடமை?

அ) மன்னன்

ஆ) தலைவன்

இ)அமைச்சன்

ஈ)புலவர்

விடை : அ

119. 'மாந்தை' மாநகரத்தை உடையவன் யார்?

அ) பல்லவன்

ஆ) பாண்டியன்

இ) சேரன்

ஈ) சோழன்

விடை : இ

120.கோழிக்கோமான் யார்?

அ)சோழன்

ஆ)பல்லவன்

இ)மொகலாயர்

ஈ)சேரன்

விடை : அ

121.சோழ மன்னனின் தலைநகரம் எது?

அ)வஞ்சி

ஆ) காஞ்சி

இ)உறையூர்

ஈ)தொண்டி

விடை : இ

122. பெரிய பாலைவனத்திலே அசைகின்ற நீரை எவ்வாறு அழைப்பர்?

அ) கானல்

ஆ) சாரல்

இ)மழை

ஈ) மணற்கேணி

விடை : அ

123. 'பாடலம்' என்பதன் பொருள் யாது?

அ)ஆடு

ஆ) மாடு

இ) குதிரை

ஈ)மான்

விடை : இ

124. கம்பியடைப்புடன் கூடிய சாளரங்களின் வழியே பெண்கள் யாரைப் பார்த்தனர்?

அ) சோழவேந்தனை

ஆ) பாண்டிய மன்னனை

இ) பல்லவனை

ஈ) சேரனை

விடை : அ

125.சோழ நாட்டில் உள்ள பெண்களின் கண்கள் வலைக்குள்ளே அகப்பட்ட ஒன்றை ஒத்திருக்கும்?

அ) மீன்களை

ஆ) கொசுவை

இ) மானை

ஈ) சிங்கத்தை

விடை : அ

126. 'சாலேகம்' என்று அழைக்கப்படுவது எது?

அ) ஜன்னல்

ஆ) கதவு

இ)தாழ்ப்பாள்

ஈ) வீடு

விடை : அ

127.தெங்கு' என்று குறிப்பிடப்படும் காய் எது?

அ) மாங்காய்

ஆ) வாழைகாய்

இ) பூசணிகாய்

ஈ) தேங்காய்

விடை : ஈ

128. பிரகாசிக்கின்ற இலை போன்ற வடிவுடைய வேற்படையைஏந்திய மன்னன் யார்?

அ) சேரன்

ஆ) சோழன்

இ) பல்லவன்

ஈ) பாண்டியன்

விடை : ஆ

129.'தென்னவன்' யார்?

அ)சேரன்

ஆ)சோழன்

இ) பாண்டியன்

ஈ) பல்லவன்

விடை : இ

130. பாண்டிய நாட்டில் வாழும் பெண் ஒருத்தி தனக்கு உயிர் தந்த தெய்வம்என்று யாரைக் கூறுகிறாள்?

அ) பாண்டியனை

ஆ) தச்சரை

இ) அன்னையை

ஈ) தோழியை

விடை : ஆ

131. 'மறம்கனல் வேல் மாறன்" - யார்?

அ) பாரி

ஆ) பேகன்

இ) பாண்டியன்

ஈ)சேரன்

விடை : இ

132. கூட்டிற்குள்ளேயிருந்த காடையைப் பறக்க விட்டவர் யார்!

அ) வேடன்

ஆ) தலைவி

இ) தலை வன்

ஈ) தோழி

விடை : அ

133. மதுரை மாநகர வேந்தன் யார்?

அ) பாண்டியன்

ஆ) கோவலன்

இ) செங்குட்டுவன்

ஈ) சேரன்

விடை : அ

134. 'வெறும் கூடு காவல் கொண்டவள்'யார்

அ) தலைவி

ஆ) அன்னை

இ)தலைவி

ஈ) செவிலித்தாய்

விடை : ஆ

**8. நந்திக்கலம்பகம்- 23,61,64,68 ( 4 பாடல்கள்)**

135. பரடு என்று அழைக்கப்படும் உறுப்பு எது?

அ) கணைக் காலின் கீழுள்ள ஓர் உறுப்பு

ஆ) பாதம்

இ) முழங்கால்

ஈ) உடல்

விடை: அ

136. நந்திமன்னனிடம் பரிசு பெற்ற மன்னன் எதன்மீது ஏறி வந்தான்?

அ) குதிரை

ஆ) பிடி

இ) இளயானை

ஈ) களிறு

விடை: இ

137. பெரிய வெள்ளாறு என்னும் இடத்தில் பகைவரை வென்றவன் யார்?

அ) மகேந்திரவர்மன்

ஆ) பாண்டியன்

இ) நந்திவர்மன்

ஈ) மாமல்லன்

விடை: இ

138. மன்னர்க்கு எல்லாம் மன்னனாக விளங்குபவன் யார்?

அ) மூன்றாம் நந்திவர்மன்

ஆ) ராஜசிம்மன்

இ) ராஜராஜ சோழன்

ஈ) பாண்டிய மன்னன்

விடை: அ

139. திருமகளது செல்வத்தையும், நிலமகளின் ஆட்சி உரிமையையும்பெற்ற மன்னன் யார்?

அ) சேரன்

ஆ) சோழன்

இ) பாண்டியன்

ஈ) பல்லவன்

விடை: ஈ

140. பல்லவனின் கண்கள் சிவந்தால் பகை நாடு என்னவாகும்?

அ) செந்நிறமடையும்

ஆ) தூசாகும்

இ) சாம்பலாகும்

ஈ) அழகாகும்

விடை: அ

141.பல்லவ மன்னனின் வாள், உறையில் இருந்து நீங்கினால் நடப்பது என்ன?

அ) வலம் துடிக்கும்

ஆ) இடந்துடிக்கும்

இ) தீமை ஏற்படும்

ஈ) பகைவரது மனைவியரின் முத்தாபரணம் கழிக்கப்படும்

விடை: ஈ

142.பல்லவனின் பாதங்களை வணங்காத மன்னர்க்கு ஏற்படுவது என்ன?

அ) இடம் துடிக்கும்

ஆ) நன்மை ஏற்படும்

இ) வலம் துடிக்கும்

ஈ)புகழ் கிடைக்கும்

விடை: அ

143. அவனி நாராயணன் என்று அழைக்கப்படும் மன்னன் யார்?

அ) நந்திமன்னன்

ஆ) கோழி கோமான்

இ) செம்பியன்

ஈ)மாறன்

விடை: அ

144. கடல் நீரைக் குடித்தவன் யார்?

அ) மன்னன்

ஆ) கடவுள்

இ) தேவர்

ஈ) சித்தன்

விடை: ஈ

145. சிறு நீர்நிலையை எவ்வாறு அழைப்பர்?

அ) குட்டை

ஆ) ஆறு

இ)ஏரி

ஈ) குளம்

விடை: அ

146. 'பிறைதவழ் செஞ்சடையான்' யார்?

அ) நான்முகன்

ஆ) ஈசன்

இ) இந்திரன்

ஈ) முருகன்

விடை: ஆ

147. கலம்பகம் எத்தனை உறுப்புகளைக் கொண்டது?

அ) 18

ஆ 10

இ) 12

ஈ 15

விடை: அ

148.பல்லவர்களின் தலைநகரம் எது?

அ) காஞ்சிபுரம்

ஆ) உறையூர்

இ) வஞ்சி

ஈ) மதுரை

விடை: அ

149. மயிலைக் காவலன் என்று அழைக்கப்பட்ட மன்னன் யார்?

அ) பாண்டியன்

ஆ) பல்லவன்

இ) கரிகாலன்

ஈ) சேரன் செங்குட்டுவன்

விடை: ஆ

**9. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - அம்புலி பருவம்**

**-குமரகுபரர்**

150.அம்புலிப் பருவம் பிள்ளைத்தமிழின் எத்தனையாவது பருவம்?

அ)7

ஆ)10

இ) 5

ஈ) 4

விடை: அ

151. குழந்தையின் எந்த மாதத்தில் அம்புலியை அழைப்பர்?

அ) பதினைந்தாம் திங்களில்

ஆ) இரண்டாம் திங்கள்

இ) மூன்றாம் மாதம்

ஈ) ஆறாம் மாதம்

விடை: அ

152. ஆகாய கங்கையானது தோன்றும் இடம் எது?

அ) பொதிகை

ஆ ) இமயமலை

இ) சிவபெருமான் தலை

ஈ) பிரமன்

விடை: இ

153. சிவபெருமானின் தலையில் உள்ளது எது?

அ) பிறை, கங்கை

ஆ) கங்கை பாம்பு

இ) பிறை பாம்பு

ஈ) தாமரை மலர்

விடை: அ

154. அல்லிமலர் எப்பொழுது மலரும்?

அ) காலையில்

ஆ) மாலையில்

இ) நிலவு ஒளியில்

ஈ) சூரியன் ஒளியில்

விடை: இ

155.சொல் மாலை சூட்டும் புலவர் யார்?

அ) நக்கீரர்

ஆ) அகத்தியர்

இ) ஔவையார்

ஈ) கபிலர்

விடை: அ

156.கிரவுஞ்ச மலையைப் பிளந்தவன் யார்?

அ) முருகன்

ஆ) சிவன்

இ) இந்திரன்

ஈ)மன்மதன்

விடை: அ

157.சேவலைக் கொடியாகக் கொண்டவன் யார்?

அ) முருகன்

ஆ) இந்திரன்

இ) விஷ்ணு

ஈ) சூரியன்

விடை: அ

158.நஞ்சுண்ட கண்டன் யார்?

அ) பிரமன்

ஆ) தேவேந்திரன்

இ) சிவன்

ஈ)முருகன்

விடை: இ

159. சந்திரனுக்கு பகையாய் உள்ள பறவை எது?

அ) சேவல்

ஆ) மைனா

இ) கோழி

ஈ)கழுகு

விடை: அ

160. 'இரவோன்' என்பது யாரைக் குறிக்கும்?

அ) ஈசன்

ஆ) சந்திரன்

இ) நான்முகன்

ஈ) விநாயகர்

விடை: ஆ

161. 'அமுதாசனர்' என்று யாரைக் குறிப்பர்?

அ) அசுரர்கள்

ஆ) யோகிகள்

இ)தேவர்கள்

ஈ)முனிவர்கள்

விடை: இ

162. 'கோன நாயகள்' யார்?

அ) சூரியன்

ஆ) சந்திரன்

இ) சுக்ரீவன்

ஈ) அனுமன்

விடை: அ

163. சந்திரனின் நிலவொளியை உண்கின்ற புள் எது?

அ) கோரைப் புல்

ஆ) சகோரப் புள்

இ) கருடப் புள்

ஈ)நாகனவாய்

விடை: ஆ

164. ஆயிரம் வேதங்களுக்கும் ஒரு பொருளாய் இருப்பவன் யார்?

அ) முத்துக்குமரன்

ஆ) விநாயகர்

இ) கண்ணன்

ஈ) சுக்ரீவன்

விடை: அ

165.முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?

அ) நக்கீரர்

ஆ) குமரகுருபரர்

இ) கபிலர்

ஈ) அருணகிரியார்

விடை : ஆ

166. கற்பக தருக்கள் எத்தனை?

அ)5

ஆ)7

இ)63

ஈ) 19

விடை: அ

167.வேண்டிய ஒன்றைப் பெறலாம் எனக் கூறுவதை எவ்வாறு அழைப்பர்?

அ) சாமம்

ஆ) பேதம்

இ) தானம்

ஈ) தண்டம்

விடை: இ

168. முத்துக்குமாரசுவாமி இறைவன் சந்நிதியை சேர்பவர்களுக்கு என்ன நீங்கும்?

அ) பிறவித் துன்பம்

ஆ) வறுமை

இ) புகழ்

ஈ) பொருள்

விடை: அ

169. அருவாயும், உருவாயும், அருவ உருவமாகவும் விளங்குபவன் யார்?

அ) குமரன்

ஆ) விநாயகன்

இ) ஈசன்

ஈ) மன்மதன்

விடை: அ

**10. அழகர் கிள்ளைவிடு தூது -(1-5 கண்ணிகள் )**

**-பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்**

170.குருகூர் என்று அழைக்கப்படும் ஊர் எது?

அ) ஆழ்வார் திருநகரி

ஆ.திருவாரூர்

இ) காஞ்சி

ஈ)மதுரை

விடை : அ

171. அரி என்று அழைக்கப்படும் தெய்வம் எது?

அ) சிவன்

ஆ) திருமால்

இ)முருகன்

ஈ)நான்முகன்

விடை : ஆ

172. கார்கொண்ட மேனிக் கொண்டவன் யார்?

அ) இந்திரன்-

ஆ)மன்மதன்

இ) திருமால்

ஈ) ஈசன்

விடை : இ

173. திருமாலுக்கும் கிளிக்கும் உரிய பெயர் யாது?

அ)அரி

ஆ)அரன்

இ) ஹரிஹரன்

ஈ) சுதன்

விடை : அ

174. 'ஐந்து மலரம் புகளை' உடையவன் யார்?

அ) இராமன்

ஆ) அர்ஜீனன்

இ)மன்மதன்

ஈ) விஜயன்

விடை : இ

175. 'வேள் ஆண்மை' என்பதன் பொருள் யாது?

அ) மன்மதன்

ஆ) உழவுத்தொழில்

இ)வேளாண்மை

ஈ) ஆடு வளர்ப்பு

விடை : அ

176. 'கால் தேரை' (காற்றுத்தேர்) வைத்திருப்பவன் யார்?

அ) நான்முகன்

ஆ)மன்மதன்

இ)சூரியன்

ஈ) சந்திரன்

விடை : ஆ

177.கதிரவனின் ஒற்றைச் சக்கரத் தேரினை இழுத்துத் திரிகின்ற குதிரைகள் எத்தனை?

அ) ஏழு

ஆ)மூன்று

இ)ஐந்து

ஈ) ஆறு

விடை : அ

178.வியாச முனிவருக்கும் கிருதாசி என்னும் கிளி வடிவ பெண்ணுக்கும் பிறந்த முனிவர் யார்?

அ) அகத்தியர்

ஆ) சட்டை முனி

இ)சுகமுனி

ஈ) மச்சமுனி

விடை : இ

179.'பஞ்சவர்ணங்களையும்' தன்னுள் கொண்ட பறவை எது?

அ) அன்னர்

ஆ) நாரை

இ) பூவை

ஈ)கிளி

விடை : ஈ

180.'பார்வதி'- என்று அழைக்கப்படும் தெய்வம் எது?

அ) பார்வதி

ஆ) சரஸ்வதி

இ) இலட்சுமி

ஈ) ஆண்டாள்

விடை : அ

181. கிளியின் பெயரைக் கொண்ட சீவகனின் மனைவி யார்?

அ) பதுமாபதி

ஆ) காந்தருவதத்தை

இ) கேமசரி

ஈ)விமலையார்

விடை : ஆ

182. 'தத்தை' என்று அழைக்கப்படும் பறவை எது?

அ) கழுகு

ஆ) கொக்கு

இ) கிளி

ஈ) நாரை

விடை : இ

183. "அச்சுதனை" எவ்வாறு அழைப்பர்?

அ) ரங்கா, ரங்கா

ஆ) சொக்கா, சொக்கா

இ) இராம இராம

ஈ) சிவ சிவ

விடை : அ

184. 'சொக்கர்' என்று அழைக்கப்படும் தெய்வம் எது?

அ) சூரியன்

ஆ) சிவன்

இ) பிரமன்

ஈ) காத்தவராயன்

விடை : ஆ

185. 'கூடு விட்டு கூடு' பாயும் தன்மை உடையவர்கள் யார்?

அ) தெய்வம்

ஆ) பேய்

இ) மனிதன்

ஈ) யோகி

விடை : ஈ

186. 'கீரம்' என்று அழைக்கப்படும் பறவை எது?

அ)கிளி

ஆ)காகம்

இ)குருவி

ஈ)ஆந்தை

விடை : அ

187. பெண்கள் கால்களில் அணியும் நகைகளை எவ்வாறு அழைப்பர்?

அ) காப்பு

ஆ) காலாழி பாடகம்

இ) கொலுசு

ஈ) தண்டை

விடை : ஆ

188. கற்பாறைகளின் அருகில் இருப்பது எது?

அ) கிளி

ஆ) ஆந்தை

இ) காகம்

ஈ) கழுகு

விடை : அ

189. கா என்பதன் பொருள் என்ன?

அ)காகம்

ஆ) சோலை

இ) அன்னம்

ஈ) குளம்

விடை : ஆ

190.ஞானிகள்இறைவனுடன் இரண்டறக் கலந்தின்புறும் மேலான நிலையை எவ்வாறு அழைப்பர்?

அ) இன்பம்

ஆ) ஆத்மநிலை

இ) சாயுச்சியம்

ஈ)தவம்

விடை : இ

191.'அழகர் கிள்ளைவிடு தூது' நூலின் ஆசிரியர் யார்?

அ) பலப்பட்டடைச் சொக்கநாதப் புலவர்

ஆ) சுப்ரதீபக் கவிராயர்

இ) செயங்கொண்டார்

ஈ) குமரகுருபரர்

விடை : அ

**11. கலிங்கத்துப்பரணி - பேய் முறைப்பாடு**

**-செயங்கொண்டார்**

192.சடைமுடியில் கங்கையை அணிந்தவர் யார்?

அ) சிவன்

ஆ) நான்முகன்

இ) இந்திரன்

ஈ) முருகன்

விடை : அ

193.சிவனது திருவருளைப் பெற்ற தெய்வம் எது?

அ) பார்வதி தேவி

ஆ) துர்க்கா தேவி

இ) காளி தேவி

ஈ) கங்காதேவி

விடை : இ

194.கலிங்கத்துப் பரணியில் கூறப்படும் சோழ மன்னன் யாா

அ) குலோத்துங்கன்

ஆ)கரிகாலன்

இ) ராஜராஜன்

ஈ) ராஜேந்திரன்

விடை : அ

195. பாழடைந்த ஊரைக் காப்பதற்கு எது தேவையில்லை என்றுபேய்கள் கூறுகின்றன?

அ) சாப்பாடு

ஆ) வேலி

இ)வாசல்

ஈ) மதில்

விடை : ஈ

196. யார் கோபித்தால் தாங்கள் பிழைக்கமாட்டோம் என்று பேய்கள்கூறுகின்றன?

அ) காளிதேவி

ஆ)துர்கா தேவி

இ) லட்சுமி

ஈ)சரஸ்வதி

விடை : அ

197.கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் யார்?

அ.குமரகுருபரர்

ஆ)செயங்கொண்டார்

இ)அருணகிரியார்

ஈ)பரஞ்சோதியார்

விடை : ஆ

198. யார் தங்கள் உடலில் பசித்தீயை வைத்ததாகப் பேய்கள்கூறுகின்றன?

அ)பிரமன்

ஆ)மன்மதன்

இ)ஈசன்

ஈ)காளிதேவி

விடை : அ

199. யார் இட்ட சாபத்தால் பசி கொடுமை நேர்ந்ததாக பேய்கள் கூறுகின்றன?

அ) முன்னோர்கள்

ஆ) தெய்வம்

இ)பெரியோர்கள்

ஈ)காளி

விடை : இ

200. பேய்கள் பசியின் கொடுமையால் எதனை தின்றது?

அ) உணவு

ஆ) உதடுகளில் பாதி

இ)கால்

ஈ) கை

விடை : ஆ

201. யார் கடைக்கண்ணை திறக்க வேண்டும் என்று பேய் வேண்டுகின்றன?

அ) காளி தேவி

ஆ) துர்கா தேவி

இ)பிரமன்

ஈ)ஈசன்

விடை : அ

202. குலோத்துங்க சோழன் எதற்கு மனம் இறங்கியுள்ளான் என்று பேய்கள் கூறுகின்றன?

அ)மக்களின் அமைதிக்காக

ஆ)திறைப் பொருளுக்காக

இ)குதிரைகளுக்காக

ஈ)யானைகளுக்காக

விடை : ஆ

203. முதுபேய் எங்கிருந்து கலிங்க நாட்டிற்கு வந்தது?

அ) இமய மலை

ஆ) கொல்லி மலை

இ)ஆனைமலை

ஈ) பச்சை மலை

விடை : அ

204.முதுபேய் யாரை தன் கைகளால் தொழுது வணங்கியது?

அ) காளி தேவியை

ஆ) பேய்களை

இ)பிரமனை

ஈ) சிவனை

விடை : அ

205. முதுபேய் வடகலிங்க நாட்டிற்குச் சென்றிருந்தபோது அங்கு 'தனக்கு என்ன தோன்றியதாக கூறுகின்றது ?.

அ)போர்

ஆ) சகுனம்

இ)துன்பம்

ஈ) இன்பம்

விடை : ஆ

206. மருப்பு என்பதன் பொருள் யாது?

அ) தந்தம்

ஆ) துதிக்கை

இ)யானை

ஈ) மதநீர்

விடை : அ

207. பருவ காலத்தில் தவறாது பெய்யும் மேகங்கள் சிவந்த இரத்தத்தை மழையாகப் பொழிந்ததை யார் பார்த்தனர்?

அ) காளிதேவி

ஆ) பேய்கள்

இ)மன்னன்

ஈ)படைவீரர்கள்

விடை : அ

208. சோதிடம் பார்க்கும் பேய்கள் என்ன உரைத்ததாக காளிதேவி முதுபேயிடம் கூறுகின்றாள்?

அ) இரத்த மழை பொழிதல்

ஆ) இரவில் வானவில் தோற்றம்

இ) புலால் நாற்றம்

ஈ) போர் நடப்பது போல்

விடை : ஆ

209. ஊரில் உள்ள வீடுகளில் என்ன வந்து தோன்றின?

அ) ஆந்தைகள்

ஆ) கழுகுகள்

இ)புறாக்கள்

ஈ) காகம்

விடை : அ

210. இலங்கையில் நடந்த இராம இராவணப் போரைவிட இரண்டுமடங்கு பெரிய போர் என்று எந்த போரைப்பற்றிகாளிதேவி கூறுகின்றாள்?

அ) பரணிபோர்

ஆ) கலிங்கப்போர்

இ) வெண்ணிப்பறந்தலைப் போர்.

ஈ) பாரதப் போர்

விடை : ஆ

211. பேய்கள் விலா எலும்பு முறியும் அளவுக்கு அடிக்கடி செய்தது என்ன?

அ) சண்டை

ஆ) சமையல்

இ) சிரித்தன

ஈ) ஓடின

விடை : இ

212. தங்கள் உயிர் எதனால் பிழைத்திருக்கின்றது என்று பேய்கள் கூறுகின்றன?

அ) நிணம், புலால் நாற்றத்தால்

ஆ) போர் நடக்கும் என்பதால்

இ) யானைப்படை போருக்கு கிளம்பியதால்

ஈ) முதுபேய் வந்ததால்

விடை : அ

## 12. அபிராமி அந்தாதி

**- அபிராமி பட்டர்**

213. 'அபிராமி அந்தாதியை' இயற்றியவர் யார்?

அ) அபிராமி பட்டர்

ஆ)குமரகுருபரர்

இ) அருணகிரியார்

ஈ) தாயுமானவர்

விடை : அ

214. 'அபிராமி' என்பதன் பொருள் யாது?

அ) மிக்க அழகுடையவள்

ஆ) அருளுடையவள்

இ) கோபமுடையவள்

ஈ) பக்தர்களை காப்பவள்

விடை : அ

215. 'திரிபுர சுந்தரி' என்று அழைக்கப்படும் தெய்வம் எது?

அ) அம்மன்

ஆ) பார்வதி

இ)இலட்சுமி

ஈ) அபிராபி

விடை : ஈ

216. அபிராமியின் பாதங்களில் உள்ள மலர் அம்புகள் எத்தனை ?

அ) 4

ஆ) 3

இ) 2

ஈ) 5

விடை : ஈ

217. எவரும் படித்துப் பொருள் தெரிந்து கொள்ள முடியாத வேதத்தின் உட்பொருளாய் இருப்பவள் யார்?

அ) திருமகள்

ஆ) கலைமகள்

இ)அலைமகள்

ஈ) அபிராமி

விடை : ஈ

218. மரணமில்லாத பெருவாழ்வு உடையவர்கள் யார்?

அ) முனிவர்கள்

ஆ) மனிதர்கள்

இ)விலங்குகள்

ஈ) மரங்கள்

விடை : அ

219. சடாமுடியில் கொன்றை மலரை அணிந்தவன் யார்?

அ) விஷ்ணு

ஆ) நான்முகன்

இ)சிவபெருமான்

ஈ) இந்திரன்

விடை : இ

220.வஞ்சிக்கொடிபோன்ற இடையை உடையவள் யார்?

அ)மனோண்மணி

ஆ) லட்சுமி

இ)சரஸ்வதி

ஈ)அங்காளம்மன்

விடை : அ

221.செந்நிறத் திருமேனியை உடையவள் யார்?

அ) மாரியம்மன்

ஆ)ஈஸ்வரி

இ) அபிராமி

ஈ) துர்க்கை

விடை : இ

222.'அபிராமி பட்டர்' தினமும் எதை பாராயணம் செய்வதாகக் கூறுகின்றார்?

அ) ஆகமநெறி

ஆ)கந்தர் சஷ்டி

இ) சிவபுராணம்

ஈ) திருப்பாவை

விடை : அ

223. எது தன் இதயமாக இருக்கின்றது என்று அபிராமி பட்டர்கூறுகின்றார்?

அ) தேவாரம்

ஆ) திருமந்திரம்

இ) திருப்பாவை

ஈ) திருவெம்பாவை

விடை : ஆ

224. 'நஞ்சு உண்ட கண்டன்' யார்?

அ) பிரமன்

ஆ) இந்திரன்

இ) முருகன்

ஈ) சிவன்

விடை : ஈ

225. 'ஜடாமுடிதரியான்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) சிவபெருமான்

ஆ) மன்மதன்

இ)அனுமன்

ஈ) முருகன்

விடை : அ

226.பரமேஸ்வரன் பருகிய நஞ்சை அமிர்தமாக்கியவர் யார்?

அ) இலட்சுமி

ஆ) சரஸ்வதி

இ)அம்பிகை

ஈ) காளிதேவி

விடை : இ

227. அபிராமியின் பாதத்தை தன் தலையில் வைத்து அருள் செய்ய வேண்டும் என்று கேட்பவர் யார்?

அ) ஆழ்வார்

ஆ) அபிராமி பட்டர்

இ) திருஞானசம்பந்தர்

ஈ) மாணிக்கவாசக்கர்

விடை : ஆ

**அலகு -3**

**சிறுகதைத் தொகுப்பு**

**1. செல்லம்மாள்**

**- புதுமைப்பித்தன்**

228.செல்லம்மாளின் கணவன் பெயர் என்ன?

அ. பிரமநாயகம் பிள்ளை

ஆ. முனுசாமி

இ. வேதநாயகம்

ஈ. தணிகாசலம் பிள்ளை

விடை : அ

229. வறுமை, நோய், சாக்காடு மூன்றையும் நேரில் அனுபவித்தவர் யார்?

அ. புதுமைப்பித்தன்

ஆ. முனுசாமி

இ. செல்லம்மாள்

ஈ. பிரமநாயகம் பிள்ளையின் தந்தை

விடை: ஈ

230.பிரமநாயகம் பிள்ளை அவர்களின் பெற்றோர்க்கு எத்தனையாவது குழந்தை?

அ .இரண்டாவது

ஆ. நான்காவது

இ .மூன்றாவது

ஈ. முதல்

விடை : ஆ

231.பிரமநாயகம் பிள்ளை தன் மனைவியுடன் எங்கே வசித்து வந்தார்?

அ. சென்னை

ஆ.மதுரை

இ. சேலம்

ஈ. திண்டுக்கல்

விடை : அ

232.பிரமநாயகம் பிள்ளை எங்கு வேலை பார்த்தார்?

அ. நகைக் கடையில்

ஆ. ஜவுளிக் கடையில்

இ. மளிகைக் கடையில்

ஈ. மருத்துவமனையில்

விடை : ஆ

233.தமது வாழ்வின் ஜீவனோபாய வசதிகளைத் தேவை என்ற எல்லை காணமுடியாத பாலைவனத்தைப் பாசனம் செய்ய, தவணை என்ற வடிகால்களை உபயோகித்தவர் யார்?

அ. செல்லம்மாள்

ஆ. பிரமநாயகம்பிள்ளை

ஈ. வேதநாயகம்பிள்ளை

இ. மருத்துவர்

விடை : ஆ

234.பிரமநாயகம் பிள்ளை தன் வீட்டிலிருந்த ஜவுளிக்கடைக்கு எதில் செல்வார்?

அ. நடந்து

ஆ. சைக்கிளில்

இ. பைக்கில்

ஈ. காரில்

விடை :அ

235. பிரமநாயகத்திற்குப் மிகவும் பிடித்த உணவு எது?

அ காணத்துவையல்

ஆ. சாம்பார்

இ. அசைவ உணவு

ஈ. புளிக்குழம்பு

விடை : அ

236. இப்பமே சொன்னாத்தானே அவுக ஒரு வளி பண்ணுவாக" செல்லம்மாள் 'அவுக' என்று யாரைக் குறிப்பிட்டாள்?

அ பிரமநாயகத்தை

ஆ. ஜவுளிக்கடை முதலாளியை

இ. டாக்டரை

ஈ. பால்கொடுப்பவரை

விடை : ஆ

237. வயிற்றுக் கடவுளுக்காக பம்பரமாக வேலை செய்து கொண்டிருந்தவர் யார்?

அ. பிரமநாயகம் பிள்ளை

ஆ.முனுசாமி

இ. செல்லம்மாள்

ஈ. கடை முதலாளி

விடை : அ

238. பிரமநாயகம் பிள்ளை கோரைப் பாயை எடுத்து வாசல் கதவுப் புறமாக விரித்துக் கொண்டு. "முருகா" என்று கொட்டாவியுடன் உட்காரும்பொழுது என்ன கூவியது?

அ. ஆந்தை

ஆ.கோழி

இ. சேவல்

ஈ. மயில்

விடை : ஆ

239.அடுப்பங்கரையில் 'சுர், சுர்' என்று தோசை சுட்டது யார்?

அ. செல்லம்மாள்

ஆ.செல்லம்மாளின் அம்மா

இ. பிரமநாயகம்

ஈ.அத்தை

விடை: அ

240. செல்லம்மாளுக்கு மயக்கம் வந்தா எதைத் தேனில் குழப்பி நாக்கில் தடவசொல்லி மருத்துவர் கொடுத்தார்?

அ. செந்தூரம்

ஆ.மாத்திரை

இ. மூலிகைப் பொடி

ஈ.சூரணம்

விடை: அ

241. பால்கார நாயுடுவை அழைத்து வர பிரமநாயகம் யாரை அனுப்பினார்?

அ. செல்லம்மாளை

ஆ. முனுசாமியை

இ. பக்கத்து வீட்டில் இருப்பவரை

ஈ.தன் தந்தையை

விடை: ஆ

242. "ஸார் உள்ளே யார் இருக்கிறது? என்று குரல் கொடுத்துக் கொண்டேகைப்பெட்டியும் வறுமையுமாக உள்ளே வந்தவர் யார்?

அ. முனுசாமி

ஆ.அம்மா

இ. அத்தை

ஈ.டாக்டர்

விடை: ஈ

243. டாக்டர். பிரமநாயகத்திடன் 'ரிக்க்ஷாக்காரனுக்கு' எவ்வளவு பணம் கொடுக்கச் சொன்னார்?

அ. நாலணா

ஆ.எட்டணா

இ. பத்து பைசா

ஈ. ஒரு ரூபாய்

விடை: அ

244. செல்லம்மாள், தான் யாரைப் பார்க்க வேண்டும் என்று தன் கணவனிடம் கூறினாள்?

அ. அம்மா

ஆ.அத்தை

இ. டாக்டர்

ஈ. பிரமநாயகத்தை

விடை : அ

245. அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு என்று கேட்ட முனுசாமிக்கு பிரமநாயகம் பிள்ளை கூறியது யாது?

அ. நன்றாக உள்ளது

ஆ. சரியில்லை

இ. இறந்துவிட்டார்

ஈ. தூங்கிக் கொண்டுள்ளார்

விடை: ஆ

246. 'செல்லம்மாள்' கதையின் ஆசிரியர் யார்?

அ. புதுமைப்பித்தன்

ஆ. பூமணி

இ. பிரபஞ்சன்

ஈ. சிற்பி

விடை : அ

247. செல்லம்மாள் யார் முன்னிலையில் இறந்து போனாள்?

அ. தன் கணவன்

ஆ. தன் தாய்

இ. தன் குழந்தைகள் முன்

ஈ. மருத்துவர் முன்

விடை: அ

## 2. அன்பளிப்பு

**- கு. அழகிரிசாமி**

248. அன்பளிப்பு சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ. ஜெயகாந்தன்

ஆ. கு. அழகிரிசாமி

இ. கீ.ராஜநாராயணன்

ஈ. சுஜாதா

விடை : ஆ

249.குழந்தைகள் மாமாவை எழுப்பிக் கேட்டது என்ன?

அ. என்ன புத்தகம் கொண்டு வந்திருக்கிறீர்கள்

ஆ. கதைகள்

இ. என்ன டைரி வாங்கி வந்தீர்கள்

ஈ. என்ன திண்பண்டம் வாங்கி வந்துள்ளீர்கள்

விடை: அ

250.சாரங்கன் எப்படிப்பட்ட குழந்தை?

அ .அடம்பிடிப்பவன்

ஆ.அன்பானவன்

இ. அமைதியானவன்

ஈ.கோபம் உடையவன்

விடை: ஆ

251. மாமா சித்ராவுக்கு எதை அன்பளிப்பாகக் கொடுத்தார்?

அ.டைரி

ஆ. புத்தகங்கள்

இ.மிட்டாய்

ஈ. ஐஸ்கிரீம்

விடை: ஆ

252. சாரங்கன், மாமாவிடம் தனக்கு வேண்டும் என்று கேட்ட புத்தகம் எது?

அ .வால்ட்விட்மனின் கதைகள்

ஆ. பாரதியார் கவிதைகள்

இ.பாரதிதாசன் கவிதைகள்

ஈ. புதுக்கவிதைகள்

விடை : அ

253.பிருந்தாவிற்கு காய்ச்சல் ஏற்பட்டபோது அவளைப் பார்ப்பதற்கு அவள் வீட்டிற்குச் சென்றது யார்?

அ. நண்பர்கள்

ஆ.ஆசிரியர்

இ. கு. அழகிரிசாமி

ஈ.தாத்தா

விடை: இ

254. மாமா, பிருந்தா வீட்டிற்குப் போனதால் அவரைக் கட்டாயப்படுத்தித் தன் வீட்டிற்கும் வருமாறு அழைத்தது யார்?

அ.சாரங்கராஜன்

ஆ.சித்ரா

இ.தேவகி

ஈ.கீதா

விடை: அ

255. புது வருடத்தில் சுந்தர்ராஜனுக்கும், சித்ராவுக்கும், மாமா எதை அன்பளிப்பாக கொடுத்தார்கள்?

அ. பரிசு

ஆ.புத்தகம்

இ. டைரிகள்

ஈ. இனிப்பு

விடை : இ

256. சாரங்கன், மாமா கையில் டைரியைக் கொடுத்து என்ன எழுதச் சொன்னார்?

அ. புத்தாண்டு வாழ்த்துகள்

ஆ. என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு

இ. குறிப்பு

ஈ. பெயர்

விடை: ஆ

257. சித்ரா, பெட்டியில் உள்ள சலவைத் துணிகளை என்ன செய்தாள்?

அ. எடுத்து வெளியே போட்டாள்

ஆ. எடுத்து உடுத்திக் கொண்டாள்

இ. மாமாவிடம் கொடுத்தாள்

ஈ. மேஜையின் மேல் வைத்தாள்

விடை : அ

## 3. குருபீடம்

**-ஜெயகாந்தன்**

258.குருபீடம் கதையின் ஆசிரியர் யார்?

அ.அசோகமித்திரன்

ஆ. ஜெயகாந்தன்

இ.ரமணி

ஈ.பிரபஞ்சன்

விடை: ஆ

259.குருபீடம்கதை எழுதப்பட்ட காலம் என்ன?

அ.1970

ஆ. 1980

இ. 1960

ஈ.2021

விடை : அ

260.ஒரு குழந்தை சாப்பிடுவதைக்கூட ஒரு நாய் மாதிரி நின்று பார்த்தது யார்?

அ .கதைத் தலைவன்

ஆ. சந்தையில் இருந்தவர்கள்

இ.சிஷ்யன்

ஈ. பெண்கள்

விடை:அ

261.முதலில் கதைத்தலைவன் (குரு) எவ்வாறு திரிந்தான்?

அ .சாமியாராக

ஆ .ஞானியாக

இ.வியாபாரியாக

ஈ. சேற்றில் மேய்கிற பன்றியாக

விடை: ஈ

262.கார்த்திகை மாதத்து நாய் மாதிரி அலைந்தது யார்?

அ கதைத் தலைவன்

ஆ.சிஷ்யன்

இ. பிச்சைக்காரி

ஈ.சந்தைக்கு வருபவர்கள்

விடை : அ

263.மலைப்பாம்பு மாதிரி அசிங்கமாக நெளிந்தவன் யார்?

அ. பிச்சைக்காரி

ஆ .கதைத்தலைவன்

இ.சிஷ்யன்

ஈ. டீ கடைக்காரன்

விடை : ஆ

264.தெருவில் நின்றவன் திண்ணையில் இருந்தவனை எவ்வாறு அழைத்தான்?

அ.சுவாமி

ஆ .குரு

இ.ஐயா

ஈ. தலைவா

விடை : அ

265. தெருவில் நின்றவன் திண்ணையில் இருந்தவனிடம் தன்னை என்னவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டினார்?

அ. குருவா

ஆ. சிஷ்யனாக

இ.நண்பனாக

ஈ. தந்தையாக

விடை: ஆ

266.எது தன்னுடைய குருபீடம் என்று குரு தன் கனவில் கட்டளையிட்டதாக சிஷ்யன் கூறினான்?

அ. சத்திரம்

ஆ. சந்தை

இ.திண்ணை

ஈ. வீடு

விடை : அ

267.பேரு என்னான்னு ஒரு கேள்வி கேட்டா ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு பதில் சொல்லறான் பாத்தியா? என்று குரு கூறியதைக் கேட்ட சீடன் அது என்ன மாதிரியான வாசகம் என்று வியந்தான்?

அ. மகாஞானவாசகம்

ஆ. குரு உபதேசம்

இ .பொன்மொழிகள்

ஈ. வாழ்க்கையின் அனுபவம்

விடை: அ

268.சீடன் குருவுக்கு என்ன சாப்பிடக் கொடுத்தான்?

அ.பொங்கல்,சுண்டல்

ஆ. புளியோதிரை ,சுண்டல்

இ. புளியோதிரை, சர்க்கரை பொங்கல்

ஈ. சர்க்கரைப் பொங்கல், தயிர் சாதம்

விடை: இ

269.குருவை அழைத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குப் போன சீடன் அங்கு என்ன செய்தான்?

அ .குருவின் ஆடைகளை துவைத்துக்கொடுத்து, குளிக்க வைத்தான்

ஆ. குளிக்க வைத்தான்

இ.யாகம் செய்தான்

ஈ.ஆற்றில் தள்ளிவிட்டான்

விடை: அ

270. அழுக்குடன் திரிந்தவன் குளித்து, குருவாக மாறியதும் சிலர் அவனைப்பார்த்து முன்பே நாம் என்னவாக நினைத்ததாக கூறினார்கள்?

அ .சித்தன்

ஆ .ஞானி

இ.அறிஞர்

ஈ. பித்தன்

விடை : அ

271. எந்த பீடத்தில் இருந்தாலும் எவன் ஒருவன் கற்றுத் தருகிறானோ அவனைஎவ்வாறு அழைப்பர்?

அ. தலைவள்

ஆ.குரு

இ .ஆசிரியர்

ஈ.மாணவன்

விடை: ஆ

272. பரமசிவனின் மடி மீது உட்கார்ந்துகொண்டு சிவனுக்கு பாடம் கற்றுக்கொடுத்தது யார்?

அ. முருகன்

ஆ. விநாயகர்

இ.பிரமன்

ஈ. விஷ்ணு

விடை: அ

**4. வேலி**

**-ராஜம் கிருஷ்ணன்**

273. வேலி கதையின் கதைத் தலைவியின் பெயர் என்ன?

அ. மாலதி

ஆ. ருக்குமணி

இ. பார்வதி

ஈ. மங்களம்

விடை: அ

274. மாலதியின் மாமியார் பெயர் என்ன?

அ. மங்களம்

ஆ.சரஸ்வதியம்மாள்

இ. ராஜம் அம்மாள்

ஈ. கோமதி அம்மாள்

விடை : ஈ

275. கோமதி அம்மாளின் பக்கத்து வீட்டு அம்மணியின் பெயர் என்ன?

அ. மங்களத்தம்மாள்

ஆ.அம்மணியம்மாள்

இ.ராஜம் அம்மாள்

ஈ. சரஸ்வதி அம்மாள்

விடை: அ

276.மாலதியை விட்டு விட்டு அவள் கணவன் எங்கு சென்றிருந்தான்?

அ.படிக்கச் சென்றிருந்தான்

ஆ வேலைக்குச் சென்றிருந்தான்

இ. திருவிழாவுக்குச் சென்றிருந்தான்

ஈ. பயிற்சியின் பொருட்டு வெளிநாடு சென்றிருந்தான்

விடை: ஈ

277. கோமதி அம்மாளின் மூத்த மகள் பெயர் என்ன?

அ. இந்திரா

ஆ.லட்சுமி

இ. செண்பகம்

ஈ. செல்வி

விடை : அ

278. கோமதி அம்மாளின் கடைக்குட்டி பெண் பெயர் என்ன?

அ. இந்திரா

ஆ.ருக்கு

இ.ராஜம்

ஈ. செண்பகம்

விடை: ஈ

279. மங்களத்தம்மாள் கோமதி அம்மாளிடம் "குலமில்ல. சாதியில்லேன்னு சொன்னாலும் அவங்க தொட்டு நீங்க எடுத்துக்க முடியுமா" என்று யாரைக் குறிப்பிட்டு சொன்னாள்?

அ. மாலதி

ஆ. செண்பகம்

இ. இந்திரா

ஈ. ராஜம்

விடை: அ

280.கீழே வந்து காபிகுடித்துவிட்டுப் போ என்று மாலதியை அழைத்தது யார்?

அ.ருக்குமணி

ஆ. கோமதி

இ.செண்பகம்

ஈ.இந்திரா

விடை:ஆ

281.ருக்குமணிதன் தங்கையை எவ்வாறு அழைத்தாள்?

அ. மாலு

ஆ. மாலதி

இ.தங்கச்சி

ஈ.அம்மா மாலதி

விடை:அ

282. மாலதியின் அக்கா பெயர் என்ன?

அ. இந்திரா

ஆ. சுமதி

இ. ஜெயந்தி

ஈ. ருக்குமணி

விடை : ஈ

283. ருக்குமணி தன் அம்மா என்ன கேட்டு வரச்சொன்னதாக கோமதி அம்மாளிட ம்கூறினாள்?

அ. பூ முடிப்பு, வளைகாப்பு நீங்க செய்யறது உண்டா?

ஆ.மாலதியின் சம்பள பணத்தை

இ.மாலதியின் உடல்நலத்தை

ஈ. மாலதிக்கு வளைகாப்பு விழா நடத்த

விடை: அ

284. உடல் நிலை சரியில்லாத மாலதிக்கு அவள் மாமியார் என்னக் கொடுத்து அனுப்புவதாகக் கூறினாள்?

அ. சாப்பாடு

ஆ. கஞ்சி

இ. இட்லி

ஈ. சீரக ரசமும் சோறும்

விடை : ஈ

285. வேலியும், முள்ளும் எதற்கு இல்லை என்று மாலதி கூறுகின்றாள்?

அ .பணத்துக்கு

ஆ. அன்புக்கு

இ .உறவுக்கு

ஈ. அனுபவத்திற்கு

**5. நெருப்புத் திருவிழா**

**-பாவண்ணன்**

286. காப்பு கட்ட என்ன இலை பறித்து வரும்படி சொன்னார் மணியக்காரர்?

அ. மாவிலை

ஆ. வேப்பிலை

இ.அரசஇலை

ஈ..பால இலை

விடை : அ

287. "எங்க ஊருக்கு வந்து எங்க ஆளுங்களயே நக்கல் அடிக்கறியா என்று கேட்டது யார்?

அ.மணியக்காரர்

ஆ சிவராமன்

இ.சுந்தரம்

ஈ. மாரிமுத்து

விடை: ஆ

288. மாமரத்தின் மேலேறி கிளைகளை வெட்டிப்போட்டது யார்?

அ.சிவராமன்

ஆ. சுந்தரம்

இ. மாரிமுத்து

ஈ.சிவா

விடை: அ

289.ஏதாவது மாங்கா இருந்தா பறிச்சிப் போடுடா உப்பு வச்சி சாப்புடுவோம் என்று யார் சத்தம் கொடுத்தது?

அ. மாரிமுத்து

ஆ.சுந்தரம்

இ. சிவராமன்

ஈ. சிவா

விடை: அ

290. தன் நண்பர்களைப் பார்த்து "மூளை இல்லாத பசங்கடா" என்று திட்டியது யார்?

அ. சுந்தரம்

ஆ. சிவா

இ. மாரிமுத்து

ஈ. சிவராமன்

விடை: ஈ

291.மாங்காயைக் கையில் வைத்து உருட்டியது யார்?

அ.கிழவி

ஆ. மணியக்காரர்

இ. சிவா

ஈ.சுந்தரம்

விடை:அ

292. யாரின் முகம் நெருப்பு போலச் சிவந்திருந்தது?

அ. சிவராமன்

ஆ.அம்மன்

இ.கிழவி

ஈ. மணியக்காரர்

விடை: இ

293.தன் கால்சட்டைப் பைக்குள் உப்பைப் பொட்டலமாய்க் கட்டி வைத்திருந்தவன் யார்?

அ.சுகுமாரன்

ஆ. சிவராமன்

இ.சுந்தரம்

ஈ.மாரிமுத்து

விடை : அ

294.சொத்தப் புடுங்கனவனுக்குத் துரோபதயம்மா கூலி தருவா, கையேந்த வச்சவனுக்கு காளியம்மா கூலி தருவா என்று கூறியது யார்?

அ .மணியக்காரர்

ஆ. கிழவி

இ.சுந்தரம்

ஈ.சுகுமாரன்

விடை : ஆ

295.சீக்கிரம் சீக்கிரம் தோரணம் தயாராவட்டும்' என்று அதட்டியவர் யார்?

அ .மணியக்காரர்

ஆ.மதுரை வீரன்

இ .சிவராமன் அப்பா

ஈ.சுந்தரம்

விடை: அ

296.புதிய வர்ணத்தில் செக்கச் செவேலென்று மின்னியது எது?

அ .மதுரை வீரன்

ஆ.திரௌபதி

இ.மாரியம்மன்

ஈ.ஊர் மக்கள்

விடை: அ

297.கத்தியின் விளிம்பில் எதை செருகி இருந்தனர்?

அ .எலுமிச்சம்பழம்

ஆ.சேவல்

இ. துணி

ஈ .கயிறு

விடை : அ

298.வெடிச்சத்தம் கேட்டதுமே எதை சுமந்தபடி பெண்கள் வரத் தொடங்கினார்கள்?

அ. பொங்கல்

ஆ. மாவிளக்கு

இ. கூழ்ப்பானை

ஈ.பானகம்

விடை : இ

299. படம்ஆரம்பித்ததும் குதிரை வண்டியில் பாட்டுப் பாடியபடி வந்த நடிகர் யார்?

அ. ரஜினி

ஆ. விஜய்

இ.கமல்

ஈ. கார்த்திக்

விடை : அ

300.நெருப்பில் இறங்கியவர்கள் அடுத்து கால் நனைக்க எது தயாராக இருந்தது?

அ.பால்

ஆ.நீர்

இ. செயற்கைகுளம்

ஈ.பூக்கள்

விடை:இ

301. எது வானத்தைத் தொட்டுவிடுவதுபோல உயிர்தெழுந்தது?

அ.நெருப்பு ஜுவாலை

ஆ. புகை

இ.நீர்

ஈ.வானவேடிக்கை

விடை: அ

302. மாட்டு வண்டியில் என்ன ஏலம் நடந்தது?

அ .தேங்காய்

ஆ.வாழைப்பழம்

இ.புடவை

ஈ.பாய்

விடை:ஆ

303.பெண்கள் எதில் பொங்கல் வைத்தனர்?

அ. கல் அடுப்பில்

ஆ. கேஸ் அடுப்பில்

இ.மண் அடுப்பில்

ஈ. கரண்ட் அடுப்பில்

விடை : அ

## 6. கணவன்,மகள்,மகன்

**-அசோகமித்திரன்**

304.ராமுசார் இன்னிக்கு வீட்டுக்கு வர நேரமாகும் என்று மங்களத்திடம் கூறியவர் யார்?

அ. சண்முகம்

ஆ.அசோகன்

இ சேகர்

ஈ.முருகன்

விடை : அ

305. மனமகிழ் மன்றத்தில் என்ன நடக்கும்?

அ. நடனம்

ஆ. பாட்டுக் கச்சேரி

இ. சீட்டுக் கச்சேரி

ஈ. மதுபானம் அருந்துதல்

விடை : இ

306. மங்களத்தின் மூத்த மகளின் பெயர் என்ன?

அ. லலிதா

ஆ. உமா

இ.சுதா

ஈ.கல்யாணி

விடை:அ

307. ராமுக்கு மைத்துனர் மோதிரம் யார் போட்டார்கள்?

அ. அப்பா

ஆ. அம்மா

இ.மாமா

ஈ..சம்பந்தி

விடை: ஈ

308. மங்களத்தின் இரண்டாவது பெண் யார்?

அ. உமா

ஆ.சுதா

இ. லலிதா

ஈ. உஷா

விடை: அ

309. மங்களத்திடம் அவள் கணவன் எத்தனை நாட்களுக்கு ஒருமுறை பீர்க்கங்காய் துவையல் செய்யச் சொல்லி கேட்டிருக்கிறான்?

அ. 2 நாட்கள்

ஆ. 4 நாட்கள்

இ.வாரம் ஒருமுறை

ஈ.15 நாட்களுக்கு ஒருமுறை

விடை: அ

310. உமா, சீட்டுக் கம்பெனியில் என்ன வேலை செய்தாள்?

அ.கூட்டுதல்

ஆ. ரசீது எழுதுதல்

இ. வரவேற்பாளர்

ஈ. பணம் வசூலிப்பவர்

விடை : இ

311. "உங்க பிள்ளை கண்டதைக் குடிச்சிட்டு மறுபடியும் சீக்கிலே விழுந்தா எழுந்திருக்க மாட்டாரு" என்று மங்களத்திடம் கூறியது யார்?

அ. டாக்டர்

ஆ.உமா

இ. லலிதா

ஈ. பக்கத்துவீட்டினர்

விடை: அ

312. மங்களம் தன் மகனிடம் எதைச் செய்ய வேண்டாம் என்று கூற முடியவில்லை என்று வருந்துகிறாள்?

அ. குடிக்காதே

ஆ. சண்டைக்குப் போகாதே

இ. வேலைக்குப் போகாதே

ஈ. இரவு லேட்டா வீட்டுக்கு வராதே

விடை :அ

313. ராமுவுக்கு என்று எடுத்து வைத்திருந்த சோற்றை மங்களம் எங்கே போட்டாள்?

அ. பிச்சைகாரரிடம்

ஆ.குப்பையில்

இ. குழந்தைகளிடம்

ஈ.முதியோர்களிடம்

விடை: ஆ

314. கணவன், மகள், மகன் என்ற சிறுகதைபின் ஆசிரியர் யார்?

அ. அசோகமித்திரன்

ஆ.அழகிரி சாமி

இ. பெருமாள் முருகன்

ஈ. கோவி. மணிசேகரன்

விடை: அ

**7. அப்பாவு கணக்கில் 35 ரூபாய்**

**-பிரபஞ்சன்**

315. அப்பாவு கணக்கில் 35 ரூபாய்' என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ. பிரபஞ்சன்

ஆ. புதுமைப்பித்தன்

இ.ஜெயகாந்தன்

ஈ.அசோகமித்திரன்

விடை : அ

316. ஒரு ரூபாய் விலையில் கிடைக்க கூடியது எது என பேருந்தில் விற்றனர்?

அ. லாட்டரி சீட்டு

ஆ. ஆங்கிலப் புத்தகம்

இ.பழங்கள்

ஈ.தேநீர்

விடை : ஆ

317.ஆசிரியருடன் பேருந்தில் பயணம் செய்தவர் யார்?

அ. அப்பாவு

ஆ.செல்வராசு

இ. ஆறுமுகம்

ஈ.ஆனந்தன்

விடை : அ

318. அப்பாவு தனக்கு சொந்த ஊர் எது என்று கூறினார்?

அ. சென்னை

ஆ.புதுச்சேரி

இ.மதுரை

ஈ.நாமக்கல்

விடை: ஆ

319. பெரியவர், பர்சில் இருந்து எவ்வளவு பணம் எடுத்தார்?

அ. 100 ரூபாய்

ஆ.35ரூபாய்

இ. 50 ரூபாய்

ஈ. 10 ரூபாய்

விடை : அ

320. யோவ் பெரியவரே, சில்லரையா பன்னெண்டு ரூபா அம்பது பைசா இருந்தா குடு' என்று அப்பாவுவிடம் கேட்டது யார்?

அ. ஆசிரியர்

ஆ. நடத்துநர்

இ.மைத்துனன்

ஈ. கடைக்காரர்

விடை: ஆ

321. சில்லரை இல்லையென்றால் எங்கே இறங்கி விட வேண்டும்' என்று நடத்துனர் அப்பாவுவிடம் கூறினார்?

அ. தாம்பரம்

ஆ. பல்லாவரம்

இ.வடபழனி

ஈ. அயனாவரம்

விடை: அ

322. 'அப்பாவு எங்கே வண்டி நின்றபின் பணத்தை மாத்திக்குடுப்பதாக ஆசிரியரிடம் கூறினார்?

அ. தாம்பரம்

ஆ. மாமண்டூர்

இ.பல்லாவரம்

ஈ. புதுச்சேரி

விடை : ஆ

323. அப்பாவுவின் மச்சினன் பெயர் என்ன?

அ.ஆறுமுகம்

ஆ. செல்வராசு

இ.பெரியசாமி

ஈ. திருப்பதி

விடை : அ

324. ஆறுமுகத்தின் மனைவி அப்பாவுக்கு கொடுத்தப் பணம் எவ்வளவு?

அ. 5 ரூபாய்

ஆ.ஒரு ரூபாய்

இ. மூன்று ரூபாய்

ஈ.10 ரூபாய்

விடை: ஆ

325. பஸ் ஸ்டாண்டில் இருந்து வெளியே வந்ததும் இருவரும் எந்தக் கடைக்குச்சென்றனர்?

அ. பழக்கடை

ஆ. டீ கடை

இ. பெட்டிக்கடை

ஈ.நகைக்கடை

விடை: அ

326. அப்பாவு இருக்கும் பகுதியின் பெயர் என்ன?

அ. சிந்தாரிப் பேட்டை

ஆ.சந்தைப் பேட்டை

இ. முத்தியால் பேட்டை

ஈ.தேனாம் பேட்டை

விடை:இ

327. அப்பாவு வசிக்கும் தெருவின் பெயர் என்ன?

அ. துளசியம்மன் கோவில் தெரு

ஆ. முருகன் கோவில் தெரு

இ. மாரியம்மன் கோவில் தெரு

ஈ. துர்க்கையம்மன் தெரு

விடை : அ

328.அப்பாவுவின் மகன் பெயர் என்ன?

அ. தங்கராசு

ஆ. செல்வராசு

இ. முருகேசன்

ஈ. ஆறுமுகம்

விடை : ஆ

329. அப்பாவு மனைவியிடம் அவளின் சகோதரன் கொடுத்ததாக ஆசிரியர் கொடுத்த பணம் எவ்வளவு?

அ. 50 ரூபாய்

ஆ. 30 ரூபாய்

இ 25 ரூபாய்

ஈ. 10 ரூபாய்

விடை : ஈ

## 8. ஆழம்

**-பூமணி**

330. தொலைவிலிருந்து சூரியனைப் புரட்டித் தள்ளி வந்தது எது?

அ.காற்று

ஆ.அலைகள்

இ.வானம்

ஈ.மழை

விடை: ஆ

331. மழை நீரால் பரவியிருந்த மைதானத்தில் எது குளித்தது?

அ.காகம்

ஆ. குருவி

இ நாய்

ஈ. பன்றி

விடை: அ

332 . வரண்டாவில் நின்ற மூத்தவள் முதலில் வாதுமைக் கொழுந்துகளை எட்டிப் பார்த்தவள் பின்பு என்ன செய்தாள்?

அ.கிள்ளிப் பார்த்தாள்

ஆ. தொட்டுப் பார்த்தாள்

இ.தள்ளி விட்டாள்

ஈ. கயிறு கட்டி மேலே ஏற்றி விட்டாள்

விடை:ஆ

333. சின்னவன் குளிரால் தாடை நடுக்கத்தில் எதைத் தேடினான்?

அ.சட்டை

ஆ .கால்சட்டை

இ. துண்டு

ஈ. பனியன்

விடை: அ

334. துணி துவைத்த அழுக்கு நுரை என்ன கட்டியிருந்தது?

அ. வீடு

ஆ. கோபுரம்

இ.குளம்

ஈ.தெப்பம்

விடை: ஆ

335. உடம்பு சதையை அறுத்துக் கொடுப்பதுபோல்மாதம் மாதம் என்ன கொடுப்பதாகக்கூறினாள்?

அ .ஸ்கூல் பீஸ்

ஆ. வீட்டு வாடகை

இ. தண்ணி பில்

ஈ.கரண்ட் பில்

விடை:அ

336. கழுத்தில் கயிறு போட்டிருந்த கமலா தன் தந்தைவருவதால் என்ன போட்டிருந்தாள்?

அ. கொடி

ஆ. தங்கசெயின்

இ.கவரிங் செயின்

ஈ.வெள்ளி செயின்

விடை: இ

337. முதுகுக் குறுக்கை நெளிக்கக்கூட நேரமில்லாமல் எழுதியதால் கதை என்னவாகதிரண்டு வந்தது?

அ. பாலாக

ஆ. நெய்யாக

இ. வெண்ணெயாக

ஈ.திரியாக

விடை:இ

338.தொண்டைக்குள் விழுங்கும்போது எது விக்கியதாக ஆசிரியர் கூறுகின்றார்?

அ. காபி

ஆ. தேநீர்

இ. பால்

ஈ. நீர்

விடை : அ

339. 'ஆழம்' சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ. பிரபஞ்சன்

ஆ. பூமணி

இ. பாவண்ணன்

ஈ. பெருமாள் முருகன்

விடை: ஆ

## 9. நீர் விளையாட்டு -பெருமாள்முருகன்

340. பசுமை மணம் பரவிய காடுகளுக்கிடையே நிலத்தின் பிளந்த வாய்போல தோன்றியது எது?

அ. கிணறு

ஆ. காடு

இ. வீடு

ஈ. ஏரி

விடை : ஆ

341. தென்னங்கீற்றுகளில் நுழைந்த கதிரொளி கிணற்றைத் துளைத்து எதைக் காட்டியது?

அ.நீரை

ஆ. மண்ணை

இ. கிணற்றின் சுவர்

ஈ. தவளை

விடை : ஆ

342. முதலில் கிணற்றில் குதிப்பவரை கிணறு என்ன செய்யும் என்று அச்சங்கொண்டனர்?

அ.காவு வாங்கும்

ஆ. சத்தம் போடும்

இ. மணல் தெரியும்

ஈ. பாம்பு இருக்கும்

விடை: அ

343. அற்புதத்தைத் தேக்கி வைத்திருக்கும் இடமாக "நீர் விளையாட்டு" சிறுகதை எதைக் கூறுகின்றது?

அ. கிணறு

ஆ. காடுகளை

இ. குளத்தை

ஈ. வீட்டை

விடை: அ

344. கருணை மிக்கது எது என கதை ஆசிரியர் கூறுகின்றார்.

அ. பனிநீர்

ஆ.குளம்

இ. கிணறு

ஈ. கிணற்றின் படி

விடை: இ

345. தண்ணீரின் அசைவில் சுவரைப் பற்றிக்கொண்டிருந்தது எது?

அ. அலை

ஆ. தவளை

இ.பாம்பு

ஈ. சிறுவர்கள்

விடை: ஆ

346. கிழவனின் வாயிலிருந்து எழும் புன்சிரிப்பைப் போல, மெல்ல நகைத்துக்கொண்டு குளிக்க வந்தவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தது எது?

அ. கிணறு

ஆ. ஏரி

இ.குளம்

ஈ. கடல்

விடை : அ

347. ஒருமுறை வந்துவிட்டவனை மீண்டும் மீண்டும் தூண்டுவதற்கான மந்திரத்தை தூண்டிவிடுவது எது?

அ.கடல்

ஆ. தொட்டி

இ. கிணறு

ஈ. வாய்க்கால்

விடை : இ

348. சித்தப்பா, கெணத்தச் சுத்தி நிக்காம எத்தன ரவுண்டு வருவீங்க என்று கேட்டது யார்?

அ. சிறுமி

ஆ. சித்தப்பாவின் நண்பர்கள்

இ. வீட்டில் உள்ளோர்

ஈ. உறவினர்கள்

விடை : அ

349."சித்தப்பாவால ரண்டு ரவுண்டே வரமுடியாது என்று கூறியது யார்?

அ. சிறுமி

ஆ. சிறுவன்

இ அப்பா

ஈ. அம்மா

விடை: ஆ

350. படியோரம் வந்து இறுதி முழுக்குப் போட்ட சித்தப்பா தலையைப் பின்னோக்சி எவற்றால் சீவிக்கொண்டான்?

அ. கைகளினால்

ஆ. சீப்பினால்

இ. நீர்ச்சீப்பினால்

ஈ. துண்டினால்

விடை : இ

351. கிணற்றின் மேற்பொந்துகளில் எவை அடைக்கிடக்கும் என்று கூறுகின்றனர்?

அ. கிழட்டுப் பாம்புகள்

ஆ. தவளைகள்

இ. மீன்கள்

ஈ. நீர்

விடை : அ

352. சித்தப்பாவின் கால்களை சிறுமி எதைப்போல் பிடித்திருந்தாள்?

அ. கயிறு போன்று

ஆ. முறுக்கிச் சுற்றிய பாம்பு போல

இ. கெட்டியாக

ஈ. தளர்ச்சியாக

விடை : ஆ

353. சுவரில் துருத்திக் கொண்டிருக்கும் கல்லொன்று பெயர்ந்து விழுவதைப் போல நீரில் படாரென விழுந்தது யார்?

அ. சிறுமி

ஆ. சிறுவன்

இ. சித்தப்பா

ஈ. தவளை

விடை : இ

354. மாயத்தின் பிறப்பிடம் கிணறு என்று நினைத்தவர் யார்?

அ. சித்தப்பா

ஆ. தந்தை

இ. நண்பர்கள்

ஈ. சிறுவர்கள்

விடை : அ

355. கிணற்றின் பகாசுர வாய்க்குள் வசமாக வந்து சிக்கிக்கொண்டது யார்?

அ. சிறுவர்

ஆ. சிறுமி

இ. சித்தப்பா

ஈ. குழந்தைகள்

விடை : இ

356. சுவர்களின் மீது ஏறிக்கொண்டு கழன்ற கண்களோடு எவை வாய் பிளந்து நின்றன ?

அ. தவளைக் குட்டிகள்

ஆ. தவளை

இ. குழந்தைகள்

ஈ. பாம்பு

விடை : அ

357. பாம்பு பாம்பு என்ற சத்தம் கேட்டதும் கைகளின் பிடி நெகிழ்ந்து வாய் பிளந்து நீருக்குள் விழுந்தது யார்?

அ. சிறுவன்

ஆ. சிறுமி

இ. சித்தப்பா

ஈ. குழந்தைகள்

விடை : இ

## 10. தாத்தாவின் ஞாபகங்கள்

**-சந்தியூர் கோவிந்தன்**

358.சித்தப்பா யாரை அடிக்க ஓடினார்?

அ. பாட்டியை

ஆ. சித்தியை

இ.அம்மாவை

ஈ. தாத்தாவை

விடை : அ

359.அம்மாவும், சின்னம்மாவும் யாரை அடக்கினார்கள்?

அ. பாட்டியை

ஆ. தாத்தாவை

இ. அத்தையை

ஈ. சித்தப்பாவை

விடை : ஈ

360. பாட்டியின் அலம்பலுக்குப் பயந்து ஓடியது எது?

அ. குருவி

ஆ. புறா

இ. காக்கை

ஈ. கழுகு

விடை : இ

361. தாத்தாவின் ஞாபகம் சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ. கோவி.மணிசேகரன்

ஆ. சந்தியூர் கோவிந்தன்

இ புதுமைப்பித்தன்

ஈ. அசோகமித்திரன்

விடை:ஆ

362.தன் தாத்தாவின் ஊருக்குப் போய் எத்தனை வருடங்கள் ஆனதாக ஆசிரியர் கூறுகின்றார்?

அ .10

ஆ .12

இ .15

ஈ .7

விடை: இ

363. தாத்தாவின் வீடு எங்கு இருப்பதாக கூறுகின்றார்?

அ. வரகு மலையடிவாரத்தில்

ஆ. பச்சை மலையில்

இ .கொல்லி மலையடிவராத்தில்

ஈ. மருதமலையடி வாரத்தில்

விடை : அ

364. தாத்தாவின் வீட்டு மேற்கூரை என்னப் பில்லினால் மேய்ந்திருந்தனர்?

அ. சீவல் பில்

ஆ. கரண்டு கணாங்கு பில்

இ. வைக்கோல்

ஈ. பச்ச பில்

விடை:ஆ

365. தாத்தா வீட்டில் எதை குத்துக் காலில் கட்டியிருந்தனர்?

அ. கருவா நாயி

ஆ. ஆடு

இ. மாடு

ஈ. நாய்

விடை : அ

366. 'கருவா நாய் எங்கிருந்து வந்ததாக ஆசிரியர் கூறுகின்றார்?

அ. மலையிலிருந்து

ஆ. குறிச்சியிலிருந்து

இ. பக்கத்து ஊரிலிருந்து

ஈ. ராஜ பாளையத்திலிருந்து

விடை: ஆ

367. வீட்டிலிருப்பவர்கள் நாய் ஓடி வருவதைப் பார்த்து யார் வீட்டிற்கு வருவதாகத் தெரிந்து கொள்வார்கள்?

அ. திருடன்

ஆ. ஓறம்பரை

இ. விலங்குகள்

ஈ. நாய்கள்

விடை: ஆ

368. தாத்தா ஆடு மேய்க்கும் இடத்திற்கு எதில் சோறு எடுத்துச் செல்வார்?

அ. சொரக்குடுக்குல

ஆ. பாத்திரத்தில்

இ. பாட்டிலில்

ஈ. பானையில்

விடை: அ

369. தாத்தா ஆட்டுப்பட்டிக்குக் காவலுக்குப் போகும்போது எதை எடுத்துச் செல்வார்?

அ. டார்ச் லைட்

ஆ. இராந்தல் விளக்கு

இ. சிம்னி விளக்கு

ஈ. தீ பந்தம்

விடை : ஆ

370. அந்தி நேரத்தில் மின்சாரக்கம்பிகளில் உட்கார்ந்து இருந்தது எது?

அ. கொக்கு

ஆ. புறா

இ. காகம்

ஈ . ஈசக்குருவிகள்

விடை : ஈ

371. நாலு மணிக்கு நடுவானில் பறந்தது எது?

அ. பெருமாள் கழுகு

ஆ. பருந்து

இ. காகம்

ஈ. ரகுடு

விடை : அ

372.மழைக்காலங்களில் மலை உச்சியிலிருந்து ஓடுவது எது?

அ. ஆடு

ஆ.குருவி

இ. ஊத்துத்தண்ணி

ஈ. விலங்கு

விடை : இ

373. பாட்டி அவள் அப்பாவுடன் சேர்ந்து என்னவெல்லாம் பிடித்ததாக ஆசிரியர் கூறுகின்றார்?

அ. உடும்பு, கௌதாரி

ஆ. கௌதாரி குருவி

இ.முயல், உடும்பு

ஈ. முயல் கௌதாரி

விடை : அ

374. சின்னமநாயக்கன் பாளையத்திலிருந்து வந்து தன்னை யார் பெண் கேட்டதாகப் பாட்டி கூறுகின்றாள்?

அ. பாண்டியன் வீடு

ஆ. மாயாண்டு வீடு

இ. தன் அத்தை வீடு

ஈ. மாமா வீடு

விடை : ஆ

375. தாத்தாவின் வீட்டு வாசலில் பெரிய அணைப்பில் என்ன மரம் இருந்தது?

அ. வேப்பமரம்

ஆ. பனை மரம்

இ. புளியமரம்

ஈ. பலா மரம்

விடை : இ

376. கண்ணு முழிக்காத குஞ்சையெல்லாம் எது தூக்கிட்டுப் போயி தின்னும்?

அ. ரகுடு

ஆ.கழுகு

இ. காகம்

ஈ. பருந்து

விடை : அ

377. தாத்தாவும், பாட்டியும் யாருக்கு ஆதரவாகப் பேசினர்?

அ. மாமாக்கு

ஆ. அத்தைக்கு

ஈ. அம்மாவுக்கு

இ. அப்பாவுக்கு

விடை : ஆ

**அலகு -4**

**இலக்கிய வரலாறு**

**அ. பன்னிருத் திருமுறைகள்**

378. ஒன்பதாம் திருமுறையில் மிக அதிகமான பதிகங்கள் பாடியவர் யார்?

அ. கருவூர்த் தேவர்

ஆ.பரணர்

இ.கபிலர்

ஈ.சேக்கிழார்

விடை : அ

379. கருவூர்த் தேவர் பாடியுள்ள மொத்த பதிகங்கள் எத்தனை?

அ. 10

ஆ.20

இ.30

ஈ.40

விடை :அ

380. திருமாளிகைத் தேவரின் ஆசிரியர் யார்?

அ. போக முனிவர்

ஆ.சமண முனிவர்

இ.பௌத்த முனிவர்

ஈ.வைணவ முனிவர்

விடை : அ

381. திருப்பல்லாண்டு பாடியவர் யார்?

அ.புனிதனார்

ஆ. சேந்தனார்

இ.நம்பியாண்டார்

ஈ.பட்டினத்தார்

விடை : ஆ

382. ஒன்பதாம் திருமுறை பாடியவர்கள் எத்தனைப் பேர்?

அ.10 பேர்

ஆ. 9 பேர்

இ.7 பேர்

ஈ.6 பேர்

விடை : ஆ

383. பதினோராம் திருமுறை பாடிய புலவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அ.11

ஆ.10

இ.13

ஈ.12

விடை : ஈ

384. திருவாலவாயுடையார் யாருக்காகத் திருமுகப் பாசுரம் எழுதினார்?

அ.பாணபத்திரருக்காக

ஆ.சேரமான்

இ.நாயனார்

ஈ.அடிகளார்

விடை : அ

385. திருமுகப் பாசுரம் எத்தனை வரிகள் கொண்டது?

அ.10

ஆ.12

இ.13

ஈ.14

விடை :ஆ

386. பொன்வண்ணத்தந்தாதி பாடியவர் யர்?

அ.தேவர்

ஆசேரமான் பெருமாள் நாயனார்

இ.சுந்தரர்

ஈ.நாவுக்கரசர்

விடை : ஆ

387. பட்டினத்தார் இயற்றிய நூல்கள் எவ்வளவு?

அ.4

ஆ.5

இ.6

ஈ.7

விடை : ஆ

388. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

அ.நாதமுனிகள்

ஆ. நம்பியாண்டார் நம்பி

இ. நம்மாழ்வார்

ஈ. பெரியாழ்வார்

விடை : அ

389. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் உள்ள நூல்கள் எத்தனை?

அ. 12 பிரபந்தங்கள்

ஆ. 24 பிரபந்தங்கள்

இ. 26 பிரபந்தங்கள்

ஈ. 18 பிரபந்தங்கள்

விடை:ஆ

390. திருமாலின் பாஞ்ச சன்னியத்தின் அம்சமாக கருதப்படும் ஆழ்வார் யார்?

அ. பூதத்தாழ்வார்

ஆ. பேயாழ்வார்

இ. பொய்கையாழ்வார்

ஈ. நம்மாழ்வார்

விடை: இ

391. 'பூதம்' என்ற சொல்லைத் தன் பாடல்களில் பயன்படுத்திய ஆழ்வார் யார்?

அ. பேயாழ்வார்

ஆ. பூதத்தாழ்வார்

இ. பெரியாழ்வார்

ஈ. திருப்பாணாழ்வார்

விடை : ஆ

392.பேயாழ்வார் திருமாலின் எந்த அம்சம்?

அ.நந்தகம்

ஆ.பாஞ்ச சன்னியம்

இ. கௌமோதகி

ஈ. சக்கரம்

விடை: அ

393.திருமாலின் சுதர்சன சக்கர அம்சமாகப் பிறந்தவர் யார்?

அ.ஆண்டாள்

ஆ. பொய்கையாழ்வார்

இ. பேயாழ்வார்.

ஈ.திருமழிசை ஆழ்வார்

விடை : ஈ

394.பெருமாள் கோயிலில் தொண்டு செய்த மூதாட்டியை இளங்குமரியாக மாற்றியவர் யார்?

அ.திருமழிசை ஆழ்வார்

ஆ. திருப்பாணாழ்வார்

இ . மதுரகவியாழ்வார்

ஈ.நம்மாழ்வார்

விடை: அ

395.திருப்பல்லாண்டு என்ற நூலை இயற்றியவர் யார்?

அ. ஆண்டாள்

ஆ.நம்மாழ்வார்

இ.பெரியாழ்வார்

ஈ.பொய்கையாழ்வார்

விடை: இ

396.ஆழ்வார்கள் மொத்தம் எத்தனை பேர்?

அ.12

ஆ.63

இ.20

ஈ.9

விடை: அ

397.பூமாதேவியின் அம்சமாகக் கருதப்படுபவர் யார்?)

அ. நாதமுனிகள்

ஆ. புனிதவதியார்

இ. ஆண்டாள்

ஈ. திலகவதி

விடை: இ

## இ. திருமடங்களின் தமிழ்ப்பணி

398. காலத்தால் முற்பட்ட சைவமடம் எது?

அ. மதுரை திருஞானசம்பந்தர் மடம்

ஆ. வீரசைவ மடம்

இ. குன்றக்குடி மடம்

ஈ. திருப்பனந்தாள் காசிமடம்

விடை: அ

399.திருவாவடுதுறை ஆதின மடத்தை நிறுவியவர் யார்?

அ. தட்சணாமூர்த்தி

ஆ. நமச்சிவாய மூர்த்திகள்

இ. ஈசான தேசிகர்

ஈ .சிவஞான முனிவர்

விடை: ஆ

400. மொட்டை மடம் என்று அழைக்கப்படும் மடம் எது?

அ.  தருமபுர ஆதீனம்

ஆ. வீரசைவ மடம்

இ. குன்றக்குடி மடம்

ஈ. திருவாவடுதுறை மடம்

விடை: ஈ

401. தருமபுர ஆதினத்தை நிறுவியவர் யார்?

அ. குருஞானசம்பந்த தேசிகர்

ஆ. ஈசான தேசிகர்

இ. சங்கர ஆதினம்

ஈ. தட்சணாமூர்த்தி

விடை: அ

402. 'தாடி மடம்' என்று அழைக்கப்படுவது எம்மடம்?

அ. தருமபுர ஆதினம்

ஆ .திருவண்ணாமலை மடம்

இ. திருப்பனந்தாள் காசி மடம்

ஈ. வீரசைவ மடம்

விடை: அ

403. திருப்பனந்தாள் மடம் வெளியிடும் மாத இதழின் பெயர் என்ன?

அ . தில்லை நாயகம்

ஆ . தமிழ்ப்பணி

இ . குமரகுருபரன்

ஈ. செந்தில் வேலவன்

விடை: இ

404. வீரசைவ மடங்களை நிறுவியவர் யார்?

அ. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

ஆ. திருநாவுக்கரசர்

இ. தில்லை நாயக சுவாமிகள்

ஈ) சிதம்பர சுவாமிகள்

விடை: அ

405. திருமணம் முதலான அனைத்துச் சடங்குகளிலும் தமிழமுறையைப் பின்பற்றும் மடம் எது?

அ. வீரசைவ மடம்

ஆ. குன்றக்குடி மடம்

இ. கோவை பேரூராதீனம்

ஈ. காஞ்சி காமகோடி பீடம்

விடை: இ

406. திருப்பனந்தாள் மடத்தில் குமரகுருபரரின் நூல்களை எத்தனை மடத்தில் மொழிபெயர்த்துள்ளனர்?

அ.10

ஆ.18

இ.20

ஈ.12

விடை: ஆ

407. திருஞான சம்பந்தர் தங்கி சென்ற மடம் எது ?

அ.மதுரை மடம்

ஆ.திருவண்ணாமலை மடம்

இ.திருப்பனந்தாள் மடம்

ஈ.வீரசைவ மடம்

விடை: அ

## ஈ. இலக்கண நூல்கள்

408. இலக்கணம் என்பது மொழியின் ________ ஆகும்.

அ. வேலி

ஆ. பயிர்

இ. நூல்

ஈ. அமைப்பு

விடை: அ

409. புலவரின் இலக்கிய வளத்தைத் தடம்காட்டும் கலங்கரை விளக்கமாக இருப்பது எது?

அ. மொழி

ஆ. இலக்கியம்

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்

விடை: இ

410. கீழ்க்கண்டவற்றுள் எது ஐந்திலக்கணம் கூறும் நூல்?

அ. மாறனகப்பொருள்

ஆ. நன்னூல்

இ. நேமிநாதம்

ஈ. ஐந்திரம்

விடை : ஈ

411. தமிழில் முதலில் தோன்றிய இலக்கண நூல் எது?

அ. அகத்தியம்

ஆ. தெல்காப்பியம்

இ. நேமிநாதம்

ஈ. நன்னூல்

விடை : அ

412. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் இலக்கணமாக

விளங்கிய நூல் எது?

அ. தொல்காப்பியம்

ஆ. அகத்தியம்

இ. ஐந்திரம்

ஈ. முத்துவீரியம்

விடை : ஆ

413. தொல்காப்பியத்தில் உள்ள இயல்கள் எத்தனை?

அ. 27

ஆ. 9

இ.17

ஈ. 5

விடை : அ

414. தொல்காப்பியம் யாருடைய அவையில் அரங்கேற்றப்பட்டது?

அ. பாண்டியன் நெடுஞ்செழியன்

ஆ. நிலம் தரும் திரு பாண்டியன்

இ. சேரன் செங்குட்டுவன்

ஈ. வைத்திய நாத தேசிகர்

விடை : ஆ

415. தொல்காப்பியம் எப்புலவர் தலைமையில் அரங்கேறியது?

அ. அதங்கோட்டாசான்

ஆ. புத்தமித்திரன்

இ. அகத்தியர்

ஈ. திருக்குருகைப் பெருமாள்

விடை : அ

416. ஐந்திரம் என்னும் இலக்கண நூலை எழுதியவர் யார்?

அ. மயன்

ஆ. புத்தமித்திரன்

இ. சுவாமி கவிராயர்

ஈ. முத்து வீரப்ப உபாத்தியார்

விடை : அ

417. ஐந்திலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது எது?

அ. அகத்தியம்

ஆ. ஐந்திறம்

இ. வீரசோழியம்

ஈ. சுவாமிநாதம்

விடை : இ

## உ. உரையாசிரியர்கள்

418."உரையாசிரியர்கள் இல்லையேல் பண்டை உயர்நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலை வரம்பில்லாப் பொருள்மணிக் குவியல்களை யாம் எங்ஙனம் பெறுதல் கூடும்" என்று கூறியவர் யார்?

அ. பண்டிதமணி மு. கதிரேசனார்

ஆ. உ.வே.சா

இ. ஆளவந்தார்

ஈ. சி.கே. சுப்பிரமணியார்

விடை : அ

419. கீழ்க்கண்டவற்றுள் எது உரையிடையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள்?

அ. சீவகசிந்தாமணி

ஆ. மணிமேகலை

இ. வளையாபதி

ஈ. சிலப்பதிகாரம்

விடை : ஈ

420. இவர்களில் யார் சமய நூலுக்கு உரை எழுதியவர்?

அ. நாதமுனிகள்

ஆ. சேனாவரையர்

இ. இளம்பூரணர்

ஈ. பரிமேலழகர்

விடை : அ

421. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வகுத்தவர் யார்?

அ. சேனாவரையர்

ஆ. கல்லாடனார்

இ. மயிலைநாதர்

ஈ. இளம்பூரணர்

விடை : ஈ

422. 'வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்தவர்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. ஆறுமுக நாவலர்

ஆ. சிவஞான முனிவர்

இ. சேனாவரையர்

ஈ. பேராசிரியர்

விடை : இ

423. 'உரைச்செம்மல்' என்றுப் போற்றப்படுபவர் யார்?

அ. இளம்பூரணர்

ஆ. சேனாவரையர்

இ. நக்கீரர்

ஈ. தெய்வச்சிலையார்

விடை : ஆ

424.'உச்சிமேல் புலவர் கொள்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. நச்சினார்க்கினியர்

ஆ. இளம்பூரணர்

இ. தொல்காப்பியர்

ஈ. சங்கர நமச்சிவாயர்

விடை : அ

425.வீரசோழியம் என்னும் இலக்கண நூலுக்கு உரை வகுத்தவர் யார்?

அ. பேராசிரியர்

ஆ. நச்சினார்க்கினியர்

இ. கல்லாடர்

ஈ. பெருந்தேவனார்

விடை : ஈ

426. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை நூல்களுக்கு உரை எழுதியவர் யார்?

அ. குணசாகரர்

ஆ. அமிர்தசாகரர்

இ. சாமுண்டி தேவ நாயனார்

ஈ. பரிப்பெருமாள்

விடை: அ

427. நம்பியகப் பொருளுக்கு உரை வகுத்தவர் யார்?

அ. பரிதி

ஆ. தருமர்

இ. நாற்கவிராச நம்பி

ஈ. ஆறுமுக நாவலர்

விடை : இ

## ஊ. சிற்றிலக்கியங்கள்

428. தமிழில் சிற்றிலக்கியம் என்று அழைக்கப்படுவது வடமொழியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ. பிரபந்தம்

ஆ. பாட்டியல்

இ. அந்தாதி

ஈ. கலம்பகம்

விடை: அ

429. சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் நூல் எது?

அ. சதுரகராதி

ஆ. பன்னிருபாட்டியல்

இ. தண்டி

ஈ. கோவை

விடை:ஆ

430. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?

அ. 90

ஆ. 15

இ. 86

ஈ. 96

விடை : ஈ

431. யாருடைய காலத்தை 'சிற்றிலக்கியக் காலம்' என்று அழைப்பர்?

அ. நாயக்கர் காலம்

ஆ. சோழர் காலம்

இ. பாண்டியர் காலம்

ஈ. பல்லவர் காலம்

விடை : அ

432. பிரபந்தம் என்னும் வடசொல்லின் பொருள் யாது?

அ. நன்கு கட்டப்பட்டது

ஆ. இலக்கணம் கூறுவது

இ. பொருள் தருவது

ஈ. அந்தாதியாக வருவது

விடை : அ

433. வீரமாமுனிவர் எழுதிய முதல் அகராதி நூல் எது?

அ. நிகண்டு

ஆ. தொன்னூல் விளக்கம்

இ. சதுரகராதி

ஈ. பேரகராதி

விடை : இ

434. பொன்வண்ணத்தந்தாதியின் ஆசிரியர் யார்?

அ. காரைக்காலம்மையார்

ஆ. சேரமான் பெருமாள் நாயனார்

இ. கம்பர்

ஈ. வீரமாமுனிவர்

விடை : ஆ

435. திருவரங்கத்தந்தாதியை எழுதியவர் யார்?

அ. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

ஆ. ஒட்டக்கூத்தர்

இ. காரைக்காலம்மையார்

ஈ. திருமழிசையாழ்வார்

விடை : அ

436. காலத்தால் முந்திய அந்தாதி எது?

அ. திருவந்தாதி

ஆ. சடகோபர் அந்தாதி

இ. அற்புதத் திருவந்தாதி

ஈ. பொன் வண்ணத்தந்தாதி

விடை: இ

437. பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்?

அ. 2

ஆ. 10

இ. 7

ஈ. 5

விடை : அ

## எ. பதினெண் சித்தர்கள்

438. சித் என்ற சொல்லின் பொருள் யாது?

அ. சித்தர்

ஆ. அறிவு

இ. ஞானம்

ஈ. ஒழுக்கம்

விடை : ஆ

439. சித்திகள் எத்தனை வகைப்படும்?

அ. 8

ஆ. 10

இ. 6

ஈ. 18

விடை : அ

440.சித்தர்களுள் திருமூலர், சிவவாக்கியார், பட்டினத்தார், கருவூரார். திருமாளிகைத்தேவர் ஆகியோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

அ. சித்தர்கள்

ஆ. தத்துவஞானிகள்

இ. பஞ்சவர்

ஈ. அறிஞர்கள்

விடை : இ

441. சித்தர்களில் பெரும்பாலோரின் சமயம் எது?

அ. சைவம்

ஆ. வைணவம்

இ. சமணம்

ஈ. பௌத்தம்

விடை அ

442. சிவவாக்கியர் எழுதிய நூல் யாது?

அ. இலக்கணம்

ஆ. இலக்கியம்

இ. வரலாறு

ஈ. சிவவாக்கியம்

விடை : ஈ

443.திருவெண்காடர் என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. பட்டினத்தார்

ஆ. பாம்பாட்டிச் சித்தர்

இ. குதம்பைச் சித்தர்

ஈ. கடுவெளிச் சித்தர்

விடை : அ

444. திருக்கழுமல மும்மணிக்கோவையின் ஆசிரியர் யார்?

அ. பத்திரகிரியார்

ஆ. பட்டினத்துப்பிள்ளையார்

இ. அழுகணிச்சித்தர்

ஈ. அகப்பேய்ச் சித்தர்

விடை: ஆ

445. பத்திரகிரியாரின் பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

அ. மெய்ஞ்ஞானப் புலம்பல்

ஆ. தாண்டவக் கோன்

இ. சித்தர் பாடல்கள்

ஈ. எண்வகைச் சித்திகள்

விடை : அ

446. ஆடு பாம்பே' என்று பாடல்களின் முடிவில் பாம்பை ஆட்டுவிப்பதுபோலப் பாடிய சித்தரை எவ்வாறு அழைத்தனர்?

அ. அகப்பேய்ச் சித்தர்

ஆ. பாம்பாட்டிச் சித்தர்

இ. குதம்பைச் சித்தர்

ஈ. கடுவெளிச் சித்தர்

விடை: ஆ

447. பாடல் ஒவ்வொன்றிலும் 'அகம்பேய்' என்று அழைத்துப் பாடியவர் யார்?

அ. பட்டினத்தார்

ஆ) அழுகணிச் சித்தர்

இ) அகப்பேய்ச் சித்தர்

ஈ) இடைக்காட்டுச்சித்தர்

விடை : இ

**அலகு -5**

**மொழித்திறன்**

**பகுபத உறுப்பிலக்கணம்**

448. ஒருவர் தம் கருத்தை வெளியிடவும் பிறர் கூறும் கருத்தைப் புரிந்து கொள்ளவும் கருவியாக இருப்பது எது?

அ. மொழி

ஆ. இலக்கணம்

இ. செய்யுள்

ஈ. உரைநடை

விடை : அ

449. மொழியைச் செம்மையாகப் பேசவும் எழுதவும் துணைபுரிவது எது?

அ. மொழி

ஆ. இலக்கணம்

இ. உரைநடை

ஈ. கவிதை

விடை : ஆ

450.எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று கூறியவர் யார்?

அ. வள்ளுவர்

ஆ. ஔவையார்

இ. கபிலர்

ஈ. பாரதியார்

விடை : ஆ

451.ஒரு மொழிக்கு முதுகெலும்பு போன்றது எது?

அ. இலக்கணம்

ஆ. இலக்கியம்

இ. பைந்தமிழ்

ஈ. முத்தமிழ்

விடை : அ

452. ஓரெழுத்து தனித்து வந்தோ, பல எழுத்துக்கள் சேர்ந்து வந்தோ பொருள் தருமாயின் அதை எவ்வாறு அழைப்பர்?

அ. பதம்

ஆ. பகுபதம்

இ. பகாப்பதம்

ஈ. முதனிலை

விடை : அ

453. பதம் எத்தனை வகைப்படும்?

அ. 4

ஆ. 6

இ. 2

ஈ. 8

விடை : இ

454. பகுபத உறுப்புக்கள் எத்தனை வகைப்படும்?

அ .5

ஆ .4

இ. 10

ஈ. 6

விடை : ஈ

455. 'பகுதி'யின் வேறு பெயர் என்ன?

அ. முதனிலை

ஆ. இடைநிலை

இ. விகுதி

ஈ. சாரியை

விடை : அ

456. 'விகுதி'யை எவ்வாறு அழைப்பர்?

அ. பதம்

ஆ. இறுதிநிலை

இ. பகுபதம்

ஈ. பகாப்பதம்

விடை : ஆ

457. பகுதி, விகுதி, இடைநிலை ' இம்மூன்றில் ஏதாவது ஒன்றைச் சார்ந்தும் இயைந்தும் வருவதை எவ்வாறு அழைப்பர்?

அ. சந்தி

ஆ. விகாரம்

இ. இடைநிலை

ஈ. சாரியை

விடை : ஈ

## ஆகுபெயர்

458. ஒரு பொருளின் இயற்பெயர், தன்னைச் சுட்டாமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டுப் பெயராகி வருவதை எவ்வாறு அழைப்பர்?

அ. ஆகுபெயர்

ஆ. இலக்கணம்

இ. இலக்கியம்

ஈ. இடைநிலைகள்

விடை : அ

459. 'தாமரை பூத்தது ' என்பது என்ன ஆகுபெயர்?

அ. பொருளாகு பெயர்

ஆ. சினையாகு பெயர்

இ .உவமையாகு பெயர்

ஈ. இடவாகு பெயர்

விடை : அ

460. குணத்தின் பெயர் அதனை உடைய பொருளுக்கு ஆகி வருவதை எவ்வாறு அழைப்பர்?

அ. தொழிலாகு பெயர்

ஆ. குணவாகு பெயர்

இ. இடவாகு பெயர்

ஈ. அளவையாகு பெயர்

விடை : ஆ

461. நிறுத்து அளக்கின்ற அளவைப் பெயர்களை எவ்வாறு அழைப்பர்?

அ. எடுத்தலளவை ஆகுபெயர்

ஆ. எண்ணலளவை ஆகுபெயர்

இ. கருவியாகு பெயர்

ஈ. கருத்தாகுப் பெயர்

விடை : அ

462. ஒரு பொருளைச் செய்தவன் பெயர், அவனால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது என்ன ஆகுபெயர் ?

அ. காரியவாகு பெயர்

ஆ . கருத்தாவாகு பெயர்

இ கருவியாகு பெயர்

ஈ. தானியாகு பெயர்

விடை : ஆ

463. ஒரு பொருளின் பெயர் அப்பொருள் இருக்கும் இடத்திற்கு ஆகி வருவதை எவ்வாறு அழைப்பர்?

அ. இடவாகு பெயர்

ஆ. கருவியாகு பெயர்

இ. தானியாகு பெயர்

ஈ. காரியவாகு பெயர்

விடை : இ

464. ஆகுபெயருக்கு முன்னால் அடைமொழி வருவது என்ன ஆகுபெயர்?

அ. அடையடுத்த ஆகுபெயர்

ஆ. உவமையாகு பெயர்

இ. நினவாகு பெயர்

ஈ. சினையாகு பெயர்

விடை : அ

465. 'ஐந்து முழம் தா'- இவ்வாக்கியம் என்ன ஆகுபெயர்?

அ. நீட்டலளவை ஆகுபெயர்

ஆ. எடுத்தலளவை ஆகுபெயர்

இ. இருமடியாகு பெயர்

ஈ. அளவையாகு பெயர்

விடை : அ

466. 'வெற்றிலை நட்டான்' - இத்தொடரில் பயின்று வரும் ஆகுபெயர் என்ன ஆகுபெயர்?

அ. சினையாகு பெயர்

ஆ. சொல்லாகு பெயர்

இ. தானியாகு பெயர்

ஈ. தொழிலாகு பெயர்

விடை : அ

467. 'காளை நடந்தான்' -இத்தொடர் கூறும் ஆகுபெயர் யாது?

அ. உவமையாகு பெயர்

ஆ. குணவாகு பெயர்

இ. இடவாகு பெயர்

ஈ. சினையாகு பெயர்

விடை : அ

468. உலகம் புகழும் -இத்தொடர் காட்டும் ஆகுபெயரைத் தருக.

அ. இடவாகு பெயர்

ஆ. காலவாகு பெயர்

இ. உவமையாகு பெயர்

ஈ. சினையாகு பெயர்

விடை : அ

**தன்வினை , பிறவினை,செய்வினை , செயப்பாட்டு வினை , நேர்க்கூற்று,**

469. சொற்கள் பல தொடர்ந்து நின்று ஒரு கருத்தை முடித்துக் காட்டுமாயின் அது ------------ எனப்படும்.

அ. வாக்கியம்

ஆ. எழுவாய்

இ. பயனிலை

ஈ. வினை

விடை : அ

470. 'வாக்கியம்' என்ற சொல்லை தமிழில் எவ்வாறு அழைப்பர்?

அ. தன்வினை

ஆ. பிறவினை

இ. முற்றுச் சொற்றொடர்

ஈ. எழுவாய்

விடை : இ

471. மாணவன் தானாகவே செய்யும் தொழிலை எவ்வாறு அழைப்பர்?

அ. தன்வினை

ஆ. பிறவினை

இ. செய்வினை

ஈ. செயப்பாட்டு வினை

விடை : அ

472. ஓர் எழுவாய் பிறரைச் செய்விக்கும் வினையை எவ்வாறு அழைப்பர்?

அ. தன்வினை

ஆ. பிறவினை

இ. செய்வினை

ஈ.செயப்பாட்டு வினை

விடை: ஆ

473. தன்வினை வாக்கியத்தை பிறவினை வாக்கியமாக மாற்றும்பொழுது எதை மாற்றக்கூடாது?

அ. காலத்தை

ஆ. இடம்

இ. வினையை

ஈ.வாக்கியத்தை

விடை: அ

474. ஒருவர் கூறியதை அவர் நேரில் சொல்வதைப் போலவே எவ்வித மாறுபாடும் இல்லாமல் அப்படியே கூறுவது என்ன வாக்கியம் ?

அ. அயற்கூற்று வாக்கியம்

ஆ. நேர்க்கூற்று வாக்கியம்

இ. முன்னிலை

ஈ. படர்க்கை

விடை:ஆ

475. ஒருவர் கூறியதை அப்படியே கூறாமல் வேறு ஒருவர் கூறுவதுபோல் கூறுவது என்ன வாக்கியம்?

அ. நேர்க்கூற்று

ஆ. தன்வினை

இ. பிறவினை

ஈ. அயற்கூற்று வாக்கியம்

விடை: ஈ

## உடம்படுமெய்

476. உடன்படாத இரண்டு உயிர்களை உடன்படுத்தத் தோன்றும் மெய்யை எவ்வாறு அழைப்பர்?

அ. உடன்படுமெய்

ஆ. வேற்றுநிலை மெய்மயக்கம்

இ. உடன்நிலை மெய்மயக்கம்

ஈ. மெய்மயக்கம்

விடை : அ

477. நிலைமொழியின் ஈறு இ. ஈ. ஐ ஆக நிற்கும்போது தோன்றும் உடம்படுமெய் எது?

அ. ய

ஆ. று

இ.க

ஈ. ன

விடை : அ

478. உடம்படு மெய்யின் வரலாற்றை ஆராய்ந்தவர் யார்?

அ. பவணந்தி முனிவர்

ஆ. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

இ. உவே.சா

ஈ. தொல்காப்பியர்

விடை : ஆ

479. உயிர் முன் உயிர்ப் புணர்ச்சியை தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகையாகப் பாகுபாடு செய்தவர் யார்?

அ. டாக்டர். எஸ். சுப்பிரமணியன்

ஆ. கா. சுப்பிரமணியன்

இ. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

ஈ. மயிலைநாதர்

விடை : அ

480. கிளி + அரிது - என்பது விட்டிசையோடு வரும்போது எவ்வாறு புணரும்?

அ. கிளி அரிது

ஆ. கிளியரிது

இ. கிளி வறிது

ஈ. கிளியரியது

விடை : ஆ

481.உயிரொலிகள் உடம்படு மெய்யில்லாமல் உச்சரிக்கப்படும் பொழுது அவை ----------------- உச்சரிக்கப்படுகின்றன.

அ. வெடிப்பொலியுடன்

ஆ. விட்டிசையோடு

இ. அளபெடைகளாக

ஈ. இயல்பாக

விடை : அ

482. இரண்டு உயிர்கள் அடுத்தடுத்து வரும்போது அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ. அளபெடை

ஆ. மயக்கம்

இ. உடம்படுமெய்

ஈ. மெய்மயக்கம்

விடை : ஆ

483. திரு + அண்ணாமலை' என்ற சொல்லில் ஏற்பட்டுள்ள மயக்கம் என்ன?

அ. உயிர்மயக்கம்

ஆ. மெய்மயக்கம்

இ.உடம்படுமெய்

ஈ. மயக்கம்

விடை : அ

484. 'கண்ணன் மாடு மேய்த்தான்' - பிறவினை வாக்கியமாக மாற்றுக.

அ. கண்ணன் மாடு மேய்ப்பித்தான்

ஆ. கண்ணனால் மாடு மேய்க்கப்பட்டது

இ. மாட்டை கண்ணன் மேய்த்தான்

ஈ. கண்ணன் மாட்டை மேய்த்தான்

விடை : அ

485. மழைநீர் மக்களால் சேமிக்கப்பட்டது' செய்வினையாக மாற்றுக.

அ. மக்கள் மழைநீரைச் சேமித்தனர்

ஆ. மழைநீரை மக்கள் சேமித்தனர்

இ. மக்களால் மழைநீர் சேமிக்கப்பட்டது

ஈ. மழைநீர் மக்களால் சேமிக்கப்பட்டது

விடை : அ

## மயங்கொலிச் சொற்கள்

486. ஓர் எழுத்தின் ஒலி நின்று பொருள் தரவேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்தின் ஒலி வருவதை எவ்வாறு அழைப்பர்?

அ. மயங்கொலிகள்

ஆ. உயிரொலிகள்

இ. மெய்மயக்கம்

ஈ. உயிர் மயக்கம்

விடை: அ

487. 'நன்னகரம் என்று அழைக்கப்படும் 'க'நகரம் எது?

அ. ந

ஆ. ன

இ. ண

ஈ. ந.ன.ண

விடை: ஆ

488.நுனி நாவால் நுனி அண்ணத்தைத் தொடுவதால் பிறக்கும் எழுத்து எது?

அ. 'ல'கரம்

ஆ. 'ள'கரம்

இ. 'ழ'கரம்

ஈ. 'ன'கரம்

விடை: அ

489. நுனி நாவானது சற்று வளைந்து நுனி அண்ணத்திற்கும் இடையண்ணத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் தொடும்போது பிறக்கும் 'ள'கரத்தை எவ்வாறு அழைப்பர்?

அ. உரசொலி

ஆ. ஆடலொலி

இ. மருங்கொலி

ஈ. ஒலியமைப்பு

விடை : இ

490. நாக்கினது நுனியானது நன்கு வளைந்து அண்ணத்தில் உரசுவதால் பிறக்கும் ழ'கரத்தை எவ்வாறு அழைப்பர்?

அ. உரசொலி

ஆ. ஆடலொலி

இ. மயங்கொலி

ஈ. ஒலியமைப்பு

விடை : அ

491. நாக்கினது நுனியானது மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவுவதால் பிறக்கும் எழுத்து எது?

அ. 'ற'கர மெய்

ஆ. 'ர'கர மெய்

இ. 'ழ'கர மெய்

ஈ. 'ச' கர மெய்

விடை : ஆ

492. நாக்கினது நுனியானது மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்து எது?

அ. 'றகர' மெய்

ஆ. 'ர'கர மெய்

இ. 'ந'கர மெய்

ஈ. 'ச' கர மெய்

விடை : அ

493. 'எண்ணாடு' என்பதன் பொருள் யாது?

அ. எனது நாடு

ஆ. எந்த நாடு

இ. எட்டு நாடுகள்

ஈ. என்னுடைய நாடு

விடை : இ

494. 'கழை' - என்பதன் பொருள் யாது?

அ. மூங்கில்

ஆ. அழகு

இ. தேவையற்றது

ஈ. களைந்து செல்லல்

விடை : அ

495. தமிழில் ண, ந, ன, ல, ள, ழ, ர, ற இதனை எவ்வாறு அழைப்பர்?

அ. மயங்கொலிகள்

ஆ. மருங்கொலி

இ. உரசொலி

ஈ.ஆடொலி

விடை : அ

496. கீழ்வருவனவற்றுள் எவை இருவகையாக எழுதப்படும் மயங்கொலிச் சொற்கள்?

அ. பவளம் -பவழம்

ஆ. இரை இறை

இ. கிலி கிளி

ஈ. கலை களை

விடை : அ

**நேர்காணல்**

497. கற்றலின் _____ நன்று

அ. கேட்டல்

ஆ. படித்தல்

இ. பாடுதல்

ஈ. நேர்காணல்

விடை:அ

498. பேட்டி ஒரு கலை. அதற்கு அறிவும் அனுபவமும் வேண்டும் என்று கூறியவர் யார்?

அ. எம்.ஜி.இராமச்சந்திரன்

ஆ. ஆர். இராமச்சந்திர ஐயர்

இ. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

ஈ. உ.வே.சா

விடை : ஆ

499. ஒருவரோடு தொடர்பு கொண்டு நேரிலோ, தொலைபேசி மூலமோ கடிதம் வாயிலாகவோ விவரங்களைக் கேட்டு அறிவதை எவ்வாறு அழைப்பர்? "

அ. பேட்டி அல்லது நேர்காணல்

ஆ. உரையாடல்

இ. பட்டிமன்றம்

ஈ. விவாதம்

விடை : அ

500. முதலமைச்சர். அரசியல் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், நடிகர்கள் போன்றவர்களின் பேட்டி எவ்வகையைச் சார்ந்ததாகும்?

அ. ஆளுமை விளக்கப் பேட்டி

ஆ. செய்திப் பேட்டி

இ. தொலைபேசிப் பேட்டி

ஈ. பேட்டி

விடை:அ

501. செய்தியினைப் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கும் கேள்விகளை கேட்பது என்ன வகையான நேர்காணல்?

அ. தொலைபேசிப் பேட்டி

ஆ. கடிதப் பேட்டி

இ. செய்திப் பேட்டி

ஈ. ஆளுமை விளக்கப் பேட்டி

விடை : இ

502.தொலைபேசிப் பேட்டி அதிக அளவில் எங்கு பிரபலமடைந்து வருகின்றது?

அ.சினிமாவில்

ஆ.தொலைக்காட்சிகளில்

இ. வானொலியில்

ஈ. ஊடகங்களில்

விடை : ஈ

503.காவல் கோட்டம்' என்னும் புதினத்தின் ஆசிரியர் யார்?

அ. சு.வெங்கடேசன்

ஆ. மு. மேத்தா

இ வைரமுத்து

ஈ. மு.வ

விடை : அ

504. மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி எங்குள்ளது?

அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

இ. புதுச்சேரி

ஈ. டெல்லி

விடை : இ

505. பேட்டி காண்பர் ________ கொள்ளக்கூடாது.

அ. கூச்சம், அச்சம்

ஆ. கட்டுப்பாடு, நெருக்கடி

இ. கேள்வி, அச்சம்

ஈ.விவரம்,கூச்சம்

விடை : அ

**விண்ணப்பம்,அலுவலகக் கடிதம் எழுதுதல்**

506.விண்ணப்பம் என்றால் ____என்று பொருள்.

அ. வேண்டுதல்

ஆ.கேட்டல்

இ. மன்னிப்பு

ஈ. கட்டளை

விடை: அ

507. விண்ணப்பத்தின் எப்பக்கம் நாள், இடம் வர வேண்டும்?

அ. வலது

ஆ. இடது

இ. முடிவில்

ஈ. முதலில்

விடை: ஆ

508.கடிதம் முடிக்கும் நிலைக்குக் கீழே இடம் பெறுவது எது?

அ. கையொப்பம்

ஆ. இணைப்பு

இ. நாள்

ஈ. இடம்

விடை : அ

509. ஒரு கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டது என்ற நிலையை உணர்த்தும் பகுதி எது?

அ. முடிக்கும் நிலை

ஆ. கையொப்பம்

இ. முகவரி

ஈ. செய்தி

விடை: அ

510. யார் கடிதம் எழுதுகிறாரோ அவரை எவ்வாறு குறிப்பர்?

அ. அனுப்புநர்

ஆ.பெறுநர்

இ. முகவர்

ஈ. செய்தியாளர்

விடை: அ

511. நாம் நேரில் கண்டு உரையாட இயலாத நிலையில் உள்ள நண்பர்கள், உறவினர்கள், அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து செய்திகளை அறிந்து கொள்ள உதவுவது எது?

அ. கடிதங்கள்

ஆ.நாளிதழ்

இ. வானொலி

ஈ. தொலைக்காட்சி

விடை: அ

512. கடிதத்தைப் பெறுபவரை எவ்வாறு அழைப்பர்?

அ. அனுப்புநர்

ஆ. தகவல் தருபவர்

இ. பெறுநர்

ஈ. அழைப்பவர்

விடை : இ

513.பெறுநர் பகுதியை அடுத்து, அதற்குக் கீழே பெறுநரை எவ்வாறு அழைப்பர்?

அ. விளித்தல் தொடர்

ஆ. முகவரி

இ. கடிதச் செய்தி

ஈ. முடிக்கும் நிலை

விடை : அ

514.கடிதத்தின் முக்கியமான பகுதி எது?

அ. அனுப்புநர்

ஆ. பெறுநர்

இ. கடிதச் செய்தி

ஈ. விளித்தல்

விடை: இ

515. கடிதத்தில் எவற்றை முறையாகக் கையாள வேண்டும்?

அ. உள்ளடக்கம்

ஆ.நிறுத்தற் குறிகள்

இ. கருத்து

ஈ. தமிழில் எழுத வேண்டும்

விடை : ஆ

516. நிறுவனங்களின் செயல்முறைக் கடிதங்கள், வணிகக் கடிதங்கள் போன்றவை என்ன வகைக் கடிதங்கள்?

அ. விண்ணப்பக் கடிதம்

ஆ. அலுவலகக் கடிதம்

இ.வணிகக் கடிதம்

ஈ. உறவினர் கடிதம்

விடை : ஆ



ஆசிரியர் அறிமுகம்

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த, குடியாத்தம் தாலூக்காவில் உள்ள அழிஞ்சிக்குப்பம் கிராமத்தில் சிதம்பரம் - மணிமேகலை தம்பதியருக்கு மகளாக பிறந்தவர். இளங்கலை மற்றும் முதுகலை தமிழ் இலக்கியம் பயின்றவர். 2002 - ஆம் ஆண்டில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றவர். 2016 - ஆம் ஆண்டில் செட் தகுதித்தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்.

2003 முதல் 2007 வரை ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக பணிபுரிந்தவர். 2007 முதல் ஒசூர் செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார். தொலைதூரக் கல்வியின் மூலமாக ஆய்வியல் நிறைஞர் படிப்பை மேற்கொண்ட மாணவர்கள் மூன்று பேருக்கு வழிக்காட்டியாக இருந்தவர். கவிதை மற்றும் சிறுகதை எழுதுவதில் அதிக ஆர்வம் காட்டி வருபவர்.

9 789381 289828